ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

**July - September 2009**

விரோதி ஆடி - புரட்டாதி 2009
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



கனடா அருள்மிகு மேருபுரம் பத்திரகாளி ஆலயத்தில்
இந்து சமயப் பேரவையின் திருக்கூட்டத்தினரால்
நடத்தப்பட்ட திருமுறைத் திருவிழா

புதிய இடத்தில் இரா சுப்பர் மார்க்கற்றுக்கு மேல்

# V. K. JEGAN INC.

**Custom Framing Book Depot**

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo, திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-265-3605**

**2607 Eglinton Ave. E., Unit 1**

**Scarborough, ON**

# Non-Medical Insurance

**வைத்திய பரிசோதனையற்ற**
**ஆயுட் காப்புறுதியை**
**பெற்றுக் கொள்ள அழையுங்கள்**



## கென் கிருபா

**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
**www.familyprotection.ca**




கனடா மலர் 10:
இதழ் 2

விரோதி வருடம்

ஆடி - புரட்டாதி

திரு. ஆண்டு -2040

ஆங்கில ஆண்டு 2009

**கௌரவ ஆசிரியர்கள்**

பேரறிஞர்

முருகவே பரமநாதன்

டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**

திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**

திரு. செ. சோமசுந்தரம்

திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**

திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**

விவேகா அச்சகம்

**வெளியீடு**

ஆத்மஜோதி

தியான நிலையம்

பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**

Siva Muthulingam

217 Morningside Ave.

Apt. 912

Toronto, ON. M1E 3E4

Tel: (416) 724-6240

www.arthmajothy.org


உ

சிவமயம்

# ஆத்மஜோதி


தாபிதம்: 1948

ARTHMA JOTHY

Est. 1948

ISSN 1703-9185


## உள்ளடக்கம்


1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. சோறு போடும் திருவாசகம்
4. நல்லூரில் நான் கண்ட திருக்கேதீஸ்வர சுவாமிகள்
5. மனக்கோயில் இரண்டு
6. 125 ஆண்டுகள் பணியில் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபை
7. அனைவருக்கும் உருத்திராக்கம்?
8. தியானம் செய்யும் போது நம் உடலில் ஏற்படும் மாற்றங்கள் என்ன?
9. மது அருந்துதல்
10. இந்துசமயப் பேரவைச் செய்திகள்
11 கலாநிதி (திருமதி) கௌசல்யா சுப்பிரமணியன்
12 சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரனார்
13. Hinduism Classes
14. திருமுறைகளின் தாற்பரியம்
15. சிவ தீட்சை
16. சைவ சமயத்தில் அந்திமைக் கிரியைகள்
17. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

## ஆன்மிகம்

ஆன்மிகம் என்பது சமயத்தோடு தொடர்புடையது, கடவுள் வழிபாட்டுக்கு முதன்மை அளிப்பது, வேத ஆகம விதிகளை நடைமுறைப்படுத்துவது, கோயிலிற் பூசைகளையும் விழாக்களையும் செய்வது, ஒழுக்கத்தை வலியுறுத்துவது என்றெல்லாம் நினைப்பவர்கள் முக்கியமான ஒன்றைப் பொதுவாகக் கருத்திலே கொள்வதில்லை - ஆன்மிகம் என்பது தங்களைப்பற்றியது என்று எண்ணத் தவறிவிடுகின்றனர்.

ஆன்மா என்றால் உயிர். உயிர்கள் பலவகையாயினும் ஆன்மிகத்தில் தங்கள் உயிர்களைப்பற்றிச் சிந்தித்து அதற்கு ஈடேற்றந் தரமுயல்பவர் மக்களேயாவர். அதனாலேயே,

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்

என்றார் வள்ளுவர் பெருமான். 'தன்னுயிர் தானறப் பெறுதல்' என்பது தன்னைத்தான் முழுமையாக அறிதல். தான் அறுதல் - நான் என்னும் முனைப்புக் கெடுதல். இக்கெடுதி 'எல்லாம் இறைவன் செயல்' என்ற உண்மை நிலைக்கு உயிரை உயர்த்தும். அந்த உயிரை ஏனைய உயிர்கள் எல்லாம் தொழுமாம்.

எல்லாம் இறைவன் செயல் என்று வெறுமனே வாயாற் சொல்லுவதற்கும் தானறப் பெற்ற ஞான நிலையிலே சொல்வதற்கும் வேறுபாடு அதிகம். ஞானநிலை இறை அருளோடு கூடியது.

தன்னுயிர் தானறப் பெற்றவர் மலபரிபாகத்தவர். அவருக்குக் காயமே கோயில் ஆகும். காயமே கோயிலாகக் கொள்பவர் இறைவனைத் தம்முள்ளே கண்டு தெளிந்தவர். அப்பர் பெருமான் இறைவனைத் தம்முள்ளே 'தேடிக் கண்டு கொண்டேன்' என்று பாடியவர். அதனால் காயமே கோயில் என்றும் பாடிக் களித்தவர்.

'உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்' என்று உடம்பினை ஓம்பினார் திருமூல நாயனார்.

இந்த இணையற்ற அனுபவமே தன்னுயிர் தானறப் பெறுதல் என்பது.

இது மனிதப் பிறவியின் தலையாய பயன்; பிறவிப் பெருங்கடலை எளிதாக நீந்திக் கடப்பதற்கு உகந்த உபாயம்;

முத்தியின்பம் பெறுவதற்கு முதன்மையான முறை. அதற்கென்றே இப்பிறவி பெறப்பட்டது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?

எனவே ஆன்மிகம் என்பது எமது உயிரின் நிலையான மேம்பாட்டுக்கே என்று துணிந்து நடப்பவர் எமது மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியவராகின்றார். ஆன்மிக வாழ்வு பக்குவ வாழ்வு. இருவினையும் ஒப்பான வாழ்வு. அதில் அமைதியும் சமாதானமுமே நிலவும். அது சீவன் சிவனாகித் துலங்கும் அநுபூதி வாழ்வு.


இத்தகைய இணையற்ற வாழ்வை நிலைநாட்டவே எமது 'ஆத்மஜோதி' இதழ் பல இடர்ப்பாடுகளுக்கு இடையிலும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. ஆன்மிக வாழ்வில் நாட்டமுள்ளவரின் ஆதரவால் அமைதியான முறையில் அது தன் பணியைத் தொடர்ந்து செய்துவருகின்றது.


- வி. கந்தவனம்
ஆசிரியர்


**FASHION FLORIST INC.**

**பாஷன் பூக்களஞ்சியம்**

**பாபுவின் கைவண்ணத்தில்**
**பூக்கள் மாலையாகின்றன**







**416-754-8282**

**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**

# எங்குமுள்ள பிள்ளையார்

வி. கந்தவனம்

## வல்வெட்டித்துறை
## தச்சுக்கொல்லை விநாயகர்

தேரரிய தாதையிவர் தேரை இற்றார்
 தேவர்களின் துயர்தீர்த்துப் பேரைப் பெற்றார்
நாரதரின் ஞானக்கனி நன்கு வென்றார்
 நற்றமிழை வளர்த்தமுனி நாண நின்றார்
ஊரதிர உலகதிர உரிமைக் காக
 உயிர்கொடுத்துப் போராடும் நாட்டுப் பற்று
வீரர்களை உருவாக்கும் வல்வை மேவும்
 விநாயகரை மேன்மையுற வேண்டு வாமே. (76)

## பருத்தித்துறை
## சித்தி விநாயகர்

மேலதுகீ ழதுவாகி நாலு மாகி
 வியாபிக்கும் திசையெங்கும் விளங்கி நின்று
காலமெலாம் உலகத்தைக் கண்கா ணிப்பார்
 காலத்தின் முடிவுவரைத் தானே நிற்பார்
மாலயனும் காணாத மாதே வற்கு
 மகவானார் நெய்தல்வள வணிகத் தொல்லூர்
மேலவர்வாழ் பருத்தித்துறை விளங்கும் சித்தி
 விநாயகர்தாள் வீழ்ந்துவினை விடுவிப் பாமே. (77)

## பொலிகண்டி – சித்தி விநாயகர்

புத்தியினாற் கண்டறியாப் புதிரா யுள்ளார்
 பொருளுக்கும் மேலான பொருளா யுள்ளார்
வித்தைபல புரிந்தாலும் விலகி நிற்பார்
 விரதங்கள் இருந்தாலும் விளங்கா நிற்பார்
பத்தியினால் மெய்யடியார் பாடி ஆடிப்
 பணிந்தேத்தப் பொலிகண்டிப் பதியை நாடிச்
சித்திவிநா யகராகத் திகழ்ந்தாள் கின்றார்
 சென்றுசிரம் பணிந்தேத்திச் சிறந்துய் வாமே. (78)

துன்னாலை
வெல்லிகந்தோட்டப் பிள்ளையார்

முன்னான முன்னானார் முன்னி லாதார்
முடிவான முடிவானார் முடிவி லாதார்
சொன்னாலும் விளங்காத சூக்கு மத்தர்
சொல்லாம லேதோன்றிக் காக்கும் அத்தர்
பொன்னான மனத்தவர்கள் புகழ்ந்து போற்றிப்
பொழுதெல்லாம் பணிந்துருகிப் புடைசூழ் மேன்மைத்
துன்னாலை வெல்லிகந்தோட் டத்துப் பிள்ளை
தூவடிகள் தொழுதுவருந் துயர்தீர்ப் பாமே. (79)


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# சோறு போடும் திருவாசகம்

பேரறிஞர் முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

எல்லா உயிர்வர்க்கமும் உழைப்பது உணவுக்கே. மனிதனுக்கு மட்டும் ஒன்று கூட. அது மானங்காக்கும் ஆடை. மனித உணவு நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் வேறுபடும். சத்துள்ள உணவு இன்றியமையாதது. சோறு உண்போர் தமிழர், சீனர், யப்பானியர். சோறு நெல்லில் இருந்து எடுத்த அரிசி கொண்டு சமைக்கும் உணவு. உண்பது நாழி உடுப்பது நான்குமுழம். பெண்கள் கட்டுவது சேலை. நாட்டை ஆளும் மன்னனில் இருந்து காட்டில் வாழும் வேடனுக்கும் ஒன்றுதான் நிலை - பசிதீர உண்பது. இதிலே வறுமையென்று வந்துவிட்டால் படும் அவலங்கள் பல. பணம், பொருள், ஏவல் எல்லாம் இருந்தும், சாப்பிடமுடியாநிலை. வாயிலே கான்சர், உடம்பிலே சர்க்கரை வியாதி, அந்தோபாபம். எல்லாம் இந்த ஒரு சாண் வயிற்றுக்காகத்தான். இந்தத் துடிப்பு, இந்தத் தாக்கம் பொது. இதை நினைந்த பாரதி தனி ஒருவனுக்கு உணவிலையெனில் இந்தச் சகத்தினை அழித்திடுவோமெனப் பாடினார். சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சாற்றலல்லவேயென நொந்து பாடினார் பட்டினத்தார். இந்த மானுட வாழ்வை உரைத்துப்பார்ப்பின் உண்டதும் உறங்கியதும் தான் கண்ட மிச்சம். இந்நிலையை இருவர் பாடினர்.

ஆசைக்கோர் அளவு இல்லை அகிலம் எலாம் கட்டி
ஆளினும் கடல் மீதிலே
ஆணை செலவேநினைவர்......
எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆகமுடியும்

- தாயுமானசுவாமிகள்
பரிபூரணானந்தம் 10

கடல் என்ற புளிமீது அலை என்ற உருக்கொண்டு,
கன வென்ற வாழ்வை நம்பி
..... ... .......
உடலென்ற கும்பிக்கு உணவென்றஇரைதேடி
ஓயாமல் இரவு பகலும்

- நடராஜப் பத்து 3

கொடுமை கொடுமை வறுமை கொடிது என்பது அவ்வை கூற்று. எல்லாவித பாதிப்பினையும் பட்டுப்பழுத்துப் பாரதி என்ன சொன்னான்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்விதந்தும் - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் முரசு 30

குடும்பத் தலைவன் உழைத்துக் கொடுக்க இல்லக்கிழத்தி சமைத்துச் சாப்பாடு போட்டாள். இன்று ஆணும் பெண்ணும் உழைத்தாற்றான் குடும்பம் இயங்கும். இந்தச் சோறு என்ற பாவனை வெவ்வேறிடங்களிற் பொருளால் மாறுபடலாம். வாழை குருத்திட, தாழை சோறிடும் ஈழமண்டல நாடெங்கள் நாடேயென - ஓர் புலவன் பாடினான். வாழையிலையில் நாம் உணவருந்துவோம். இயற்கை சோறிடும் பாவம் அலாதியானது. மேலே தாழைமரம் வளர்ந்து கமகமவென்று (வெண்) பூச்சொரிகிறது. கீழேயுள்ள வாழைஇலையில் அப்பூச்சொரிந்து கிடக்கும் காட்சி. சாப்பாடு போடுவது போன்ற ஒரு பாவனை.

சுந்தரர் இலகுவாக இறைவனோடு உரையாடித் தமக்கு வேண்டுவதைப் பெறுவார். இந்த மனோரம்மியத்தில் உடுக்கத் துணியும் உண்ண உணவும் இலாவகமாய்க் கிடைத்து விடுகிறது.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்கி னும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமா
அம்மையே சிவலோகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுறவில்லையே. 7:10.1

இச்சை - விருப்பம். கூறை - ஆடை. ஐயுறவு - சந்தேகம்..

இப்பிரயோகம் பற்றி அவதானிக்கும்போது சோறு உணவைக் குறிப்பது போல இறையனுவத்தோடு இணைத்து வெவ்வேறு பொருள் தரக்காணலாம்.

சோறு - தோத்திரம் - திருவிழா - சிவபதம் என்றெல்லாம் பொருள் தருகிறது. சோத்தெம்பிரான் என்ற பாவனை திருவாசகத்தில்

ஈர்இடங்களில் அமைந்துளமை தெளிவாக் விளங்குகிறது.

முழுது அயில் வேல்கண் ணியர் என்னும் மூரித் தழல்முழுகும்
விழுது அனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுது செல்வான்நல் தொழும்பரில் கூட்டிடு சோத்து எம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாய்உன்னைப் பாடுவனே.

- நீத்தல்விண்ணப்பம் 43

பொருள்: எம்பிரான் - எம்பெருமானே, உடையாய்-உடையவனே. முழுது அயில்வேல் -முழுக்கூர்மையை உடைய வேற்படை போன்ற, கண்ணியர் என்னும் - கண்களை உடைய மாதரார் என்கிற, மூரித்தழல் முழுகும் - பெருநெருப்பில் முழுகுகின்ற, விழுது அனையேனை-வெண்ணெய் போன்ற என்னை, விடுதி-விட்டு விடுவாயோ, உன்னைப் பாடுவன்-உன்னை நான் புகழ்ந்து பாடுவன், நின்-உனது, வெறி-மணம் பொருந்திய, மலர்-தாமரை மலர் போன்ற, தாள்-திருவடியை, தொழுதுசெல்-வணங்கிச் செல்கின்ற, வானத் தொழும்பரில்-கூட்டிடு பரவெளித்தொண்டருடன் சேர்ப்பாயாக. பழுது செய்வேனை-குற்றம் செய்யும் என்னை, விடேல்-கைவிடாதே.சோத்து-வணக்கம்.

சோத்தம் என்பது-இழிந்தார் உயர்ந்தார்க்குச் செய்யும் வணக்கம். அது சோத்து எனக் கடைக்குறைந்து நின்றது.

- உரை ஜி. வரதராஜன்

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட் கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

- திருப்பொற்சுண்ணம் 8

பொருள்: வாள்-வான்போன்ற, தடங்கண்-பெரியகண்களையும், மடம்-இளமையுமுடைய, மங்கை நல்லீர்-மங்கைப் பருவப் பெண்களே, வரிவளை ஆர்ப்ப-வரிகளை உடைய வளையல்கள் ஒலிக்கவும்,

வண் கொங்கை பொங்க- வளப்பம் மிகுந்த தனங்கள் (முலை) பூரிக்கவும், தோள் திருமுண்டம் துதைந்து இலங்க-தோளிலும், நெற்றியிலும் திருநீறு பிரகாசிக்கவும், எம்பிரான்-எம்பெருமானே, சோத்து என்று-வணக்கம் என்று, சொல்லிச் சொல்லி-பலதரம் கூறி, கூறி நாள் கொண்ட - அப்பொழுது பறித்த, நாள்மலர் - அன்று மலர்ந்த மலர்கள் சூட்டப் பெற்ற, பாதம் காட்டி- திருவடி யைக்காட்டி, நாயின்கடைப்பட்ட நம்மை-நாயினும் கீழ்ப்பட்ட நம்மை, இம்மை-இப்பிறவியிலே, ஆட்கொண்ட வண்ணங்கள் - ஆண்டு கொண்ட முறைகளை, பாடிப்பாடி-பலமுறை பாடி, ஆட-இறைவன் திருமுழுக்கிற்கு பொற்சுண்ணம்-பொன்போலும், வாசனைப்பொடியை, நாம் இடித்தும்

- உரை: ஜி - வரதராஜன்

ஏழாந்திருமுறையில் அமைந்த ஓர் தேவாரம் இத்தொடரை உள்வாங்கி இருக்கிறது.

கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்
உமைக் கொண்டுழல் கின்றதோர் கொல்லைச் சில்லைச்
சேத்திட்டுக்குத் தெருவே திரியும்
சிவபூதமும் நீரும் திசை திசை யன
சோத்திபடுவிண் ணோர்பலரும் தொழநும்
அரைக்கோவணத் தோடொரு தோல்புடை சூழ்ந்(து)
ஆர்த்திட்டதும் பாம்பு கைக் கொண்ட தும்பாம்பு
அடிகேள் உமக்(கு) ஆட்செய அஞ்சுமே.

- சுந்தரர் 7:75-1

பொ-ரை: அடிகளே! பெரியமலையும் மிகுந்த வன்மையும் மிகுந்த பரங்குன்றில் கோயில் கொண்டுள்ளீர்! உம்மைத் தாங்கிச் செல்கின்ற, இளைய ஓர் எருது மணல் மேடுகளைத் தம்கொம்பால், குத்தித் தெருக்களிற் திரியும், சிவபூதங்கள் தம் உரப்பல் ஒலியால் உம்மைச் சூழ்ந்தே பல திசைகளிலும் நிற்கும் தேவர் பலரும் 'சோத்தம்' எனச் சொல்லி வணங்குவர். நீரோ அரையில் கோவணத்துடன் ஒரு தோலைச்சுற்றி அதன்மேல், கச்சாகப் பாம்பினைக் கட்டி இருப்பீர், கையில் கொண்டதும் பாம்பு. ஆகவே உமக்கு அடிமை செய்ய அஞ்சுவோம்.

சோத்தம் பெருமான் என்ற வழக்காறு சைவத்தில் மட்டுமன்றி வைணவ ஆழ்வார்கள் திருவாக்கிலும் இடம்பெற்றிருக்கிறது.

வணநன் றுடைய வயிரக் கடிப்பிட்டு
　　வார்காது தாழப் பெருக்கி
குணநன் றுடையர்இக் கோபால பிள்ளைகள்
　　கோவிந்தா! நீ சொல்லுக் கொள்ளாய்
இணைநன் றழகிய இக்கடிப் பிட்டால்
　　இனிய பலாப்பழம் தந்து
சுணநன் றணிமுலை யுண்ணத் தருவன் நான்
　　சோத்தம் பிரானிங்கே! வாராய்.

பெரியாழ்வார் 2:3:4

கண்ணனின் பன்னிரு நாமங்களிவொன்று கோவிந்தன். கோவிந்தனைச் சோத்தெம்பெருமான் என அழைக்கிறார் பெரியாழ்வார். கடிப்பு என்றாற் காதணி -தோடு எனப் பொருள். கண்ணனுக்குக் காதணி விழா இன்று. யசோதை அன்போடு அழைக்கிறான். காது நோகும் என மழலைக் கண்ணன் கடத்துகிறான். யசோதைப் பிராட்டியோ இனிய ஆசைவார்த்தைகளைக் கூறி அவனை இசைவிக்கிறாள். பலாப்பழம் தருவேனென இதவார்த்தையால் அவனை அழைப்பதாக மேற்பாசுரம் பாடப்பட்டிருக்கிறது.

சோறு என்பதற்குப் பல அர்த்தம் கண்டோம். கறையான் புற்றின் உள்ளே ஈரமாய் அமைந்திருக்கும். பலவனை புற்றாம் பழஞ்சோறு என அழைக்கிறோம். அது பழஞ்சோறு போன்றது. திருச்சோற்றுத்துறை ஒரு திருத்தலம். “அன்னம் பாலிக்கும் சிற்றம்பலம்” என அப்பர் (5:1.1) பாடுகிறார். இதற்கு மோட்சம், சிவகதி யெனப் பொருள் கூறுவர் சிலர். சிவனை அண்டில் சிவகதி எய்தலாம். அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலவனைப் பாடிய திருவாசகம் நமக்கு உண்ணச் சோறும் சிவகதியும் தரும் என்பதில் எவ்வளவும் சந்தேகமே இல்லை. சிலர் திருவாசகத்தை மரண வீட்டிற் பாடிக் கிடைத்த பொருளைக் கொண்டு வயிற்றுக்குச் சோறிடுகிறார்கள். ஆகவே சோறு போடுகிறது திருவாசகம் என்றும் கூறலாம்.

ஆழமாய்ச் சிந்திப்போமாக.

சோத்தெம் பெருமானைப்பாடித் தொல் பிறவி அறுப்போமாக!

---

**திருநாவுக் கரசுவளர்** திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் **வாகீசர்** வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்.

- திருநாவுக்கரசு நாயனார் புராணம்

# நல்லூரில் நான் கண்ட திருக்கேதீஸ்வர சுவாமிகள்

- சு. சிவதாஸ் -

(முன்னாள் ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி)

காவி வஸ்திரமும் உருத்திராக்கமும் விபூதியும் தரித்து ஊன்று தடியும் கொண்டு மெல்ல மெல்ல நடந்து வரும் சுவாமிகளின் கண்களில் கண்ணீர்த் துளிகளும் அரும்பி வரும். கடவுளின் வெவ்வேறு வடிவங்களையும் தனது சிவதெய்வத்தின் வடிவமாய்க் கண்டு ஆராத இன்பம் கொள்ளும் பக்தருள் மாணிக்கம் போல் வருவார் இவர். சுவாமிகளை இரு தடவையாவது பார்த்திருப்பேன், அவரோடு உரையாடியிருப்பேன். ஆனால் இரண்டாம் தடவை சந்தித்தது, என் ஆழப்பதிந்த அனுபவமாயிற்று.

நல்லூர் மகோற்சவ காலமது. பெரும்பாலும் தீர்த்தோற்சவ தினமாக இருக்கலாம். மாலை ஆறு மணியளவில், நன்றாக இருள் கவ்வியிருந்த வேளையில், நல்லூர் ஆலய வயிரவர் கோயிலடிக்குச் சென்றேன். வேப்பமரங்களால் சூழப்பெற்றிருந்த காரணத்தால் ஆளை ஆள் தெரியாத மம்மல் இருட்டு. வயிரவர் கோயில் வெளிமண்டபத்தில் சில அடியார் புடை சூழ, நாராயணன் அறிதுயில் கொள்ளும் பாங்கில் படுத்திருந்தார் சுவாமிகள்.

பாதங்களைத் தொட்டு வணங்கி 'சுவாமி' என்றேன். "அடேய், வந்திட்டாயாடா?," என்று திருவாய் மலர்ந்து பேரானந்தமுற்று என்னோடு பேச ஆரம்பித்தார்.

இவரை ஒரு வருடத்துக்கு முன்பு இந்த ஆலய மகோற்சவத்தின் போதே நான் கண்டு உரையாடியிருக்க வேண்டும். ஆனால் பல வருட கால நண்பன் போல அவர் என்னோடு பேச விருப்பப்பட்டது எனக்கு அதிசயமாயிற்று. கண் தெரியாத இருட்டிலே எப்படி இவர் என்னை இனங் கண்டார் என்று வியப்புற்று நிற்கையில், "எப்படி உன்னைக் கண்டேன் என்று தெரியுமா? ஆன்மாவின் வடிவம் ஒலியடா, அதனாலேதான் உன்னைக் கண்டு கொண்டேன்" என்றார் அவர். "உனக்கு எத்தனை வயது" என்றார். நான் இருபத்தொன்பது என்றேன். உடனே, "முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒரு பொருளை" என்ற அடியோடு தொடங்கும் பாடலின் சில வரிகளைப் பாடினார்.

சிவயோக சுவாமிகளும் மூன்றும் ஒன்றாச்சுதடி என்று பாடினார். திருக்கேதீஸ்வர சுவாமிகள் மூன்றற்று ஒரு பொருளை என்று பாடியதன் பொருள் எனக்கு விளங்காவிட்டாலும், அல்லது

அதற்கு பல, பல அர்த்தங்கள் இருந்தாலும் சுவாமி எனக்கு உணர்த்திய கருத்து, இப்படிப் புரிந்தது. அதாவது ஒருவன் ஏறக்குறைய முப்பது வயது வருகையில், இறைவனையே சரணாகதியென்று எண்ணித் தனது வாழ்வைப் புனித வழியில் திருப்புவானாயின், அது மிகவும் விரும்பத்தக்கது என்பதாகும்.

சுவாமி இப்படிச் சொல்லிவிட்டு கண்ணீர் மல்க, மல்க திருவாசகமொன்று பாடலானார். திருவாசகத்தையே பெருவாசகமாகக் கொண்டு வாழ்ந்து வந்ததால் இவரைத் திருவாசகச் சுவாமி என்றும் அழைப்பர். சபாரத்தினம் சுவாமி என்று அழைக்கப்படுபவரும் இவரேதான்.

கொழும்புத்துறையில், சிவயோகசுவாமிகள் நிரந்தரமாகப் பிற்காலத்தில் ஆசிரமம் அமைத்து இருப்பதற்கு முன்பு, அதற்கு கிட்டவாக தெருவில் நின்ற இலுப்பை மரமொன்றின் கீழ் விசரர், பைத்தியகாரர் போல் இருப்பாராம். தெருவால் போவார் வருவாரில் ஒரு சிலர் யோகர் சுவாமிகளின் அருமை பெருமையை உணராது பல இம்சைகளைக் கொடுத்து வந்தார்கள் என்பர்.

சபாரத்தினம் சுவாமிகளும் சிறுவனாய் இருக்கும்போது யோகர் சுவாமிகளோடு இவ்வாறு முரண்பட்டுக் கொண்டதும் உண்டு என்று அடியார்களுக்கு சொல்லியிருக்கிறார்.

மிகவும் இளமையிலே, யோகர் சுவாமிகளின் அருள்நோக்கம் பெற்றதாலோ என்னவோ, சபாரத்தினம் சுவாமிகள், மன்னார் மாதோட்டத்துத் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஒரு சிலரின் உதவியோடு காடுகளை வெட்டித் திருவாசக மடம் அமைத்து, தொண்டர்களுக்குப் பெருந்தொண்டு புரிந்தாரென்பர். ஏராளமான நெல்வயல்களில் விவசாயம் செய்து, அதனால் பெறும் நெல்லரிசி கொண்டு அன்னதானம் வழங்கி வந்தார். இதனால் இவருக்கு திருக்கேதீஸ்வர சுவாமிகள் என்ற பெயர் வரலாயிற்று.

பிற்காலங்களில் மன்னார்ப் பகுதியில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக, தொண்டமனாறு செல்வச் சந்நிதியருகே அமைந்திருக்கும் ஆனந்தா ஆச்சிரமத்தின் ரமணமன்றத்தில் திருவாசக முற்றோதல்களை நடத்தி வந்தார். திருத்தலங்களுக்குச் சென்று, சென்று வழிபடுதலையே தமது வழக்கமாகக் கொண்டிருந்தார். சிவசின்னங்கள் மூன்றையும் தரித்து, திருவாசகத்தையும் திருப்புகழையும் பக்தியோடு ஓதி, சிவதலங்களையும் முருக தலங்களையும் தரிசித்து இவரது வாழ்வு, சிவனே முருகனாக அவதரித்தார் என்பதை நிரூபிப்பதாய் அமைந்தது.

இற்றைக்கு ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பதாக, (25-01-1988) சிவனடிக்கலப்புற்று, தனது பக்தர்களுக்கு மாறாத சிவதாகத்தை ஏற்படுத்தினார். சுவாமியின் பெயரால் திருவாசக சபையை அமைத்து இவரது பக்தர்கள் இன்றும் இவரை நினைவுகூர்ந்து வருகிறார்கள். இவரது அஸ்தி, மறவன்புலவு சின்னத்தம்பி சுவாமிகளின் சமாதிக்கோயில் வளவிலே புனிதமாக வைக்கப்பட்டுப் பேணப்படுகிறது.

பண்பும் இனிமையும் சாந்தமுகமும் பூக்கும் முறுவலும், நட்பாக ஒருவரை அணுகும் முறையும் கொண்ட சுவாமிகளின் திருவேடப்பொலிவு இன்றும் என் கண் முன் நிற்கின்றது. காண்பார், காட்சி, காட்சிப்பொருள் மூன்றும் ஒன்றாய், 'ஏகம் ஏவ அத்துவிதீயம் பிரம்மன்', என்ற பிரம்ம சூத்திரவாக்குக்கு ஒப்பாய் வாழ்ந்த சுவாமிகளின் திருவடிகள் என் சிந்தை நிறைந்தனவே.

---

நின்றதிருத் தாண்டகமும் நீடுதனித் தாண்டகமும்
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துதிருத் தாண்டகமும்
கொன்றைமலர்ச் சடையார்பால் குறைந்தடைந்த நேரிசையுந்
துன்றுதனி நேரிசையும் முதலான தொடுத்துரைத்தார்.

- திருநாவுக்கரசு நாயனார் புராணம்




# மனக்கோயில் இரண்டு

திரு. குமார் புனிதவேல்

மால் அயன் தேடி மேலும் கீழும் காணவில்லை எனில் அந்த இறைவன் எங்கு குடியிருந்திருக்க வேண்டும்? நிச்சயமாக அவன் ஒளிந்திருந்த இடம் அவர்கள் உள்ளமாக இருந்திருக்க வேண்டும். இதனால் தான் திருமூலரும் தனது 725வது மந்திரத்தில்,

உடம்பினை முன்னம் இழக்கு என்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

என்று பாடிச் சென்றார். இப்படி உடம்புக்குள்ளே ஒளிந்திருக்கும் இறைவருக்கு உடம்புக்குள்ளே கோயில் கட்டிய இருவரைப்பற்றி தெய்வச் சேக்கிழார் பெருமான் சொல்லிச் சென்றுள்ளார்.

உலகில் தோன்றியுள்ள குடிகள் நான்கு. அவை பிராமணர், சைத்திரியர், வைசியர் சூத்திரர் எனப்படும். அவற்றில் முதல்தோன்றிய குடி சூத்திரர் என்று கொள்ள வேண்டும். கற்பிப்பவர்களாய பிராமணர்க்கு மற்ற குடிகள் இல்லாமல் கற்பிப்பது யாவர்க்கு? மேலும் குடியில்லா மன்னனாக சைத்திரியர் இருக்க முடியாதல்லவா. அதேபோலவே வைசியர்களும். ஆனால் தொழில்செய்யும் சூத்திரர் மற்ற குடிகளை நம்பியிருப்பவர்களுமாவர். அதனால் தான் சமுதாயத்தில் கால்களாக சூத்திரர்களை உருவகித்தனர்.

சூத்திரகுடியில் பிறந்த வாயிலாரைப்பற்றி குறிப்பிட வரும்வேளை சேக்கிழார் சுவாமிகள்,

மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்
தன்மை வாயிலார் என்னும் தபோதனார்....... 4089

தொல்குலமாய சூத்திரத் தொல்குலம் நன்மைபெறத் தோன்றினார். வாயிலார் எனக் கூறுகிறார். இவர் சென்னைக்கு அருகமைந்த மைலாப்பூர் எனும் கடற்கரை நகரத்தில் பிறந்தவர். அவர் எப்படி வாழ்ந்தார் என்பதற்கான ஆதாரங்கள் தரப்படாவிடினும் அவரது அகவழிபாடு பற்றி மூன்று பாடல்களில் சேக்கிழார் சுவாமிகள் தந்துள்ளார். தனது மனதை ஒருநிலைப்படுத்தித் தியானம் செய்து

உள்ளத்துக்குள்ளே உள்உறைபவனுக்கு ஒரு கோயில்கட்டி அங்கு சிவனைச் சிந்தையில் தாபித்து, அக்கோயிலில் அறிவு விளக்கேற்றி, ஆனந்தமாகிய நீராட்டி, அன்பாகிய அமுதை நிவேதிப்பது தம் திருத்தொண்டாகக் கொண்டார்.

இவ்வாறு ஏன் பூசை செய்து வாயிலார் சிவமானார் என்று பாடியுள்ளார் சேக்கிழார் பெருமான்.

நீராடுஞ் சடையாரை நீடுமன ஆலயத்துள்
ஆராத அன்பினால் அருச்சனைசெய் தடியவர் பால்
பேராத நெறிபெற்ற பெருந்தகையார் தமைப்போற்றிச்
சீராடும் திருநீடும் முனையாடுவார் திறமுரைப்பாம். - 4093

வாயிலார் மற்ற மூன்று குடிகளையும் தாங்கிநிற்கும் சூத்திரர் குடியாகின் நான்கு குடிகளின் சிகரத்தில் அமைந்த பிராமணக்குடியில் பிறந்தவர் பூசலார். இவர் சான்றோர் நிறைந்த நாடு எனும் தொண்டைநாட்டின் திருநின்றவூர் (தற்காலத்தில் தின்னவூர் என அழைக்கப்பெறும்) என்ற ஊரில் பிறந்தவர். தம்குலத்துக்குரிய மரபுப்படி வேதங்கள் கற்றுத் தேர்ந்து சிவபக்தியில் சிறந்து விளங்கினார்.

இவர் இறைவனுக்குக் கோயில் கட்டப் பெரிதும் விரும்பி பொருள் தந்து உதவும் பெருமக்களைக் கண்டு வருந்திக் கேட்டும் ஒரு சிறு அளவுகூடப் பொருள் கிடைக்காதநிலையில் என் செய்வேன் என உடலும் மனமும் நைந்து போனார். முடிவாகத் தன் மனதினாலேயே ஒரு கோயில் எடுக்கத் துணிந்து, அதற்குரிய செல்வங்களை ஒன்றுவிடாமல் தன் உள்ளத்தினால் சேர்த்துக் கொண்டார். இக்காட்சியைத் தெய்வச் சேக்கிழார்

மனதினாற் கருதி எங்கும் மாநிதி வருந்தத் தேடி
எனைத்தும் ஓர் பொருட்பே றின்றி என்செய்கேன் என்று தைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
நினைத்துனை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார்.
- 4180

அவர்கோயில் கட்டுவதற்கான கட்டிடப் பொருட்கள் மற்றும் ஆச்சாரியர்கள் அனைவரையும் மனதில் சேர்த்துக் கொண்டார். ஆகம விதிகளுக்கமைய அத்திவாரத்தை நல்ல நாள்கோள் பார்த்து வெட்டுவித்துக் கல்நாட்டுவித்தார். கோயிலின் ஒவ்வொரு உறுப்பையும் மிகக் கவனமாகக் கட்டுவித்தார். மதில் முதலியன

வகுத்தார். கிணறு, குளம் முதலியன எடுத்தார். இவ்வாறு மானசக் கோயில் கட்டிப் பிரதிட்டை நாளையும் நிச்சயம் செய்தார்.

அச்சமயத்தில் தொண்டை நாட்டுத் தலைநகரத்தில் காஞ்சித் தலைவர் காடவ மன்னர் கல்லால் ஒரு திருக்கோயில் கட்டி முடித்தார். அந்நாட்டுச் சோதிடர்களைக் கலந்தாலோசித்து பிரதிட்டைக்கென ஒரு நன்னாளும் குறிப்பிட்டார். அந்நாளுக்கு முன்னாள் இரு கோயில்களினதும் நாயகனான சிவபிரான், மன்னன் கனவிலே தோன்றி, பக்தனே! திருநின்ற ஊரிலே பூசலார் என்பவன் ஒருவன் உளான். அப்பக்தன் நீண்டநாள் நினைந்து நினைந்து ஒரு கோயில் கட்டியுள்ளான். நாளை நாம் அதில் எழுந்தருள்வோம். ஆதலால் உனது ஆலயப் பிரதிட்டையைப் பின்னொரு நாளில் வைத்துக் கொள் என்று திருவாய் மலர்ந்தருளினார். கேட்டதும் மன்னர் விழித்தெழும்பினார்.

இறைவன் மனதைக் கொள்ளை கொண்ட பூசலாரைக் காணப் பேரவாக் கொண்டார்; புறப்பட்டார்; திருநின்ற ஊரை அடைந்தார். அங்கிருந்த மக்களிடம் சென்று பூசலார் கட்டிய திருக்கோயில் எங்கே இருக்கிறது என்று விசாரித்தார். அவர்கள் அனைவரும் பூசலார் இங்கு ஒருகோயிலும் கட்டவில்லை என்று பதிலளித்தார்கள். பின் மன்னர் அந்நாட்டு அந்தணர்களை அழைத்து 'பூசலார் யார்?' எனக் கேட்டார். அதற்கு அவர்கள் அந்நாட்டில் பூசலார் எனும் ஏழை அந்தணர் உளரெனக் கூறி, அவரை அழைத்துவரப் புறப்பட்டார்கள்.

மன்னர் அவர்களைத் தடுத்து, அவரைக் காணத் தாமே புறப்பட்டார். பூசலாரைக் கண்டு தொழுது பின் அடிகள் கட்டிய திருக்கோயில் எங்கே இருக்கிறது? அக்கோயிலின் பிரதிட்டை நாள் இன்று என்று சிவபிரானால் அறியப்பெற்றேன். அதில் பங்கெடுத்து அடிகளை வணங்கி அருள்பெற வந்தேன் என்றார்.

மன்னர் உரைகேட்ட பூசலார் மருண்டார். சிறியேனை ஒரு பொருளாகக் கருதியோ சிவபெருமான் அருள்செய்தார்! யான் திருக்கோயிலைக் கட்ட முயன்றேன். ஆண்டியால் அம்பலம் கட்ட முடியுமா? எனக்கு மனதில் நிறையவே வேட்கையுண்டு. அதனால் மனதிலேயே ஒரு கோயிலைக் கட்ட விழைந்தேன் என்று தனது மனக்கோயிலை விளக்கிச் சொன்னார். கேட்ட மன்னரும் அடியில் வீழ்ந்து வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

இறைவனைச் சேவிப்பதற்கு பொருள் ஒரு தடையாய் இருக்க முடியாது என்பதை இவ்விரு நாயன்மாரும் எமக்கு விளக்கிச் சென்றுள்ளார்கள். இங்கு அப்பர் சுவாமிகள் பாடிய தேவாரத்தையும்

நோக்குவது நலம்.

காயமே கோயில் ஆகக் கடி மனம் அடிமை ஆக
வாய்மையே தூய்மை ஆக மனமணி இலிங்கம்ஆக
நேயமே நெய்யும் பலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

'தொண்டர் அகமல்லால் கோயில் இல்லை
ஐயன் ஐயாறனார்க்கே' எனவும் பாடியுள்ளார்.
எனவே எம் உள் உறையும் இறைவனை என்றும் வணங்கி வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

---

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினில் புகஎறிந்தார்.

- திருநாவுக்கரசு நாயனார் புராணம்


# R & S AUTO SALES

**Top Quality New & Used Cars**

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**



RADHA

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**

**5310 Finch Ave. Unit 23**
**Scarborough, ON.**
**Between Brimley & Midland**

## 125 ஆண்டுகள் பணியில்
## தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபை

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

125 ஆண்டுகள். இடையீடற்ற பணி. நான்கு அல்லது ஐந்து தலைமுறைகள். தொய்வில்லாமல், சோர்வில்லாமல், தளர்வில்லாமல், தடுமாறாமல் சைவ சித்தாந்தக் கொள்கைகளை முன்னெடுத்த பணி, தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையின் பணி.

125 ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடியில் எழுத்தறிவு பெற்றவர் 10%. அவர்களுள் பலர் 5 அல்லது 8ஆம் வகுப்புவரை படித்திருந்தனர். நூற்றுக்கு ஒருவரோ அல்லது இருவரோ தமிழ் மொழியிலும் சைவ சமயத்திலும் புலமை பெற்றிருந்தனர்.

இன்று தூத்துக்குடியில் எழுத்தறிவு 80%. 30 வயதுக்குள் எவரும் 10ஆம் வகுப்பு வரை படித்திருப்பர். திரைப்படச் சுவரொட்டிகள் மலிந்த காலம் பறந்து கடந்தது. கல்விக்கூடச் சுவரொட்டிகள் மலிந்த காலம் இன்று.

தமிழரின் வரலாற்றில் முன்னெப்பொழுதும் காணப்படாத தொகையினர் கல்வி கற்றவராக வாழ்கின்ற நாள் இன்று. கல்வி மட்டும் அன்று, தொழில் நுட்பமும் விரைந்து முன்னேறிய காலம் இது. வாழ்வியலின் ஒவ்வொரு துறையிலும் திணையிலும் தொழில் நுட்பம் ஊடுருவி உள்ளது.

எழுத்தறிவு, படிப்பறிவு, தொழில்நுட்ப வல்லாண்மை, பல்கலைப் புலமை யாவும் வீச்சுடன் விரவிப் பரவிப் பயனுறுத்துகின்றன.

ஆனாலும் தமிழரிடையே குறைகள் இல்லாமல் இல்லை. தமிழ் மண்ணில் பிறந்து தமிழரால் வளர்த்த தத்துவக் கோட்பாடான பகுத்தறிவு சார்ந்த சைவ நெறி எழுத்தறிவும் படிப்பறிவும் பெற்றோரிடையே பரவலாக ஊடுருவவில்லை.

மூட நம்பிக்கைகள் பெருகி உள்ளன. அறிவு சார்ந்த சைவ நெறி வழக்கங்கள் அருகி உள்ளன. பள்ளிக் கல்வி முடித்தோரிடையே தமிழ் மொழி அறிவோ சைவ நெறித் தெளிவோ

பெறாதோர் தொகை கணிசமான அளவாகும். அத்தகைய தமிழ்ப் பரம்பரை உருவாகி இருப்பது காலத்தின் அலங்கோலம்.

125 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சூழல் வேறு. எழுத்தறிவற்ற மக்களுக்கு மொழியையும் நெறியையும் இனிப்போடும் சுவையோடும் கற்பனையோடும் ஊட்ட வேண்டிய கடமை படித்தோருக்கு அன்று இருந்தது. புராண விரிவுரைகள், கதா காலட்சேபங்கள், பக்திப் பரவச விழாக்கள் அன்றையக் காலத் தேவைகள்.

வீட்டுக்குள் இருந்தவாறே நிலவில் மனிதன் நடப்பதைக் காண்கின்ற காலம் இது. தொலைக்காட்சி, இணையதளம் போன்றன பூமிப்பந்தை குக்கிராமம் ஆக்கியுள்ளன.

இந்தத் தொழில்நுட்ப உத்திகளை தமிழ்மொழி மற்றும் சைவ நெறிப் பரம்பலுக்கு எடுத்தாள வேண்டிய கடப்பாடு நம் தலைமுறைக்கு உண்டு. தமிழ்நாட்டில் இல்லந்தோறும் திருமுறைகளை ஓதுமாறு ஊட்ட வேண்டிய கடமை நமக்கு உண்டு.

125 ஆண்டுகளுக்கு முன்பிருந்த உத்திகளையும் பரப்புரை முறைகளையும் மாற்றிட வேண்டும். முதியோர் மட்டுமே வரக்கூடிய உரைவீச்சுக் கூட்டங்களால் தமிழ் மொழிக்கும் சைவ நெறிக்கும் பயன் என்ன? தெரிந்தவர்களுக்குத் தெரிந்ததைத் மீண்டும் மீண்டும் தெரியப்படுத்துவது எந்நாள் வரை? சிறுவரையும், விடலைகளையும், இளைஞர்களையும், நடுத்தர வயதினரையும் ஈர்க்கும் நிகழ்ச்சிகளாகப் புதிய உத்திகள் எழவேண்டாமா?

திருமுறையில் ஒரு பாட்டையாவது மனப்பாடம் செய்ய முடியாதோர் வாழும் தமிழ் நாட்டின் வீடு, தமிழுக்குச் சுடுகாடு. திருமுறைகளின் தெள்ளிய தமிழைச் சுவை குன்றாத ஓசையுடன் உச்சரித்தும் இசைத்தும் பயிலாத வாய்கள் இல்லாதோர் தமிழ்நாட்டில் எந்த வீட்டிலும் இல்லை என்ற நிலை வரவேண்டும்.

தமிழையும் சைவத்தையும் வலிந்து தமிழகத்தில் உலவ விட்ட தேவார மூவர், நமக்காகத் தம்மையே ஈந்தவர்கள். பொற்றாளமும் உழவாரமும் அவர் கருவிகள்.

இன்று கணினியும் தொலைக்காட்சியும் எழுதுகோலும் கருவிகளாக மாறியுள்ளன. பொற்றாளத்திற்கும் உழவாரத்திற்கும் மாற்றாக அவை வந்துள்ளன. புதிய கருவிகளைப் பயன்படுத்தித் தமிழ் மொழியையும் சைவ நெறியையும் தமிழரின் வாழ்வியலுடன் இணைப்பது தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் கடமைகளுள் ஒன்று.

புதிய சிந்தனை, மாற்று உத்தி, காலத்திற்கேற்ற நற்கோலம் இவையே தமிழரின் வளர்ச்சிக்கு அடிப்படை. சைவ நெறியைக் கைக் கொள்வதற்கு அடித்தளம்.

தமிழ்மொழி, சைவ நெறி சார்ந்த அனைத்து அமைப்புகளுக்கும் தமிழ்நாட்டில் வழிகாட்டியாக இந்தத் தலைமுறையில் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையார் பணிபுரியக் கடமைப் பட்டிருக்கிறார்கள். சிறுவர்களையும், மாணவர்களையும், விடலையர்களையும், இளைஞர்களையும் சென்றடையும் நோக்கோடு செய்திகளை எடுத்துச் செல்லும் வல்லாரை உருவாக்குங்கள்.


**P. KAYILASANATHAN**

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**



குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**
**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**

## அனைவருக்கும் உருத்திராக்கம்?

குருவடி பணிந்து

இ. லம்போதரன்

சிறப்பு வாய்ந்த சிவசின்னமான உருத்திராக்கத்தை அனைவரும் அணியலாமா என்ற கேள்வி பல சைவப்பெருமக்களிடம் இருக்கின்றது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தாம் எழுதிப் பதிப்பித்த இரண்டாம் சைவவினாவிடையிலே உருத்திராக்கவியல் பகுதியிலே பின் வருமாறு கூறுகின்றார்.

**வினா 165: உருத்திராக்கம் தரித்தற்கு யோக்கியர் யார்?**
**விடை: மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடைய வராய் உள்ளவர்.**

**வினா 166: உருத்திராக்கம் தரித்துக்கொண்டு மதுபானம் மாமிசபோசனம் முதலியவை செய்தவர் யாது பெறுவர்?**
**விடை: தப்பாது நரகத்தில் வீழ்ந்து, துன்பத்தை அனுபவிப்பர்.**

இவ்வாறு இருப்பினும் இன்று பலரும் உருத்திராக்கம் அணிவது என்பது ஆத்மீகக் காரணங்களுக்காக மட்டுமல்லாமல் அழகியல் நாகரிக காரணங்களுக்காகவும்கூட என்றாகிவிட்டது. அதேசமயம் சமயநெறிமுறையில் வாழ்பவர்கள்கூட உருத்திராக்கம் தரிப்பதற்கு மிகவும் பாரிய யோக்கியதையும், ஆசார ஒழுக்கங்களும் வேண்டும் என்று கருதி தாம் உருத்திராக்கத்தை அணியாது கூசி ஒதுங்குவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான இன்றைய நிலையில் உருத்திராக்கம் அணிவது பற்றி எமது சமய அடிப்படை நூல்களான வேத, ஆகம, புராண நூல்களின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி மீளாய்வு செய்வது பொருத்தமானதே.

பொதுப்படையாக எமது அடிப்படை நூல்கள் விபூதி தாரணத்தை எல்லோருக்கும் விதித்து, உருத்திராக்க தாரணத்தை சிவ தீட்சை பெற்று, சமய ஆசார அனுட்டானங்களைத் தவறாது கடைப்பிடிப்போருக்கே விதித்திருந்தாலும், பல இடங்களில் உருத்திராக்க தாரணத்தையும் எல்லோருக்கும் பொதுவாக விதந்தோதியிருக்கும் தன்மையையும் பார்க்கக்கூடியதாக

இருக்கின்றது.

பஹூனாம் ஜன்மநாமந்தே மஹாதேவ ப்ரஸாதத ;/
ருத்ராக்ஷதாரணஸ்ரத்தா ஸ்வபாவேநைவ ஜாயதே;/

“சிவபெருமான் திருவருளால் அனேக சென்மங்களின் இறுதியிலே உருத்திராக்க தாரணத்தில் (உருத்திராக்கம் அணிவதில்) சுவயமாக அன்பு உதிக்கின்றது” என்று பராசர புராணம் கூறுகின்றது. இது பகவத் கீதையின்

அனேகஜன்ம ஸம்சித்தா ஸ்ததோயாதி பராங்கதிம்;//

“அனேக சென்மங்களிலே செய்த நற்செயல்களின் பலனாக ஒருவன் நல்ல கதியை அடைகின்றான்” என்று சொல்லும் சுலோகத்துடன் ஒத்து நோக்கத்தக்கது.

ருத்ராக்ஷதரு ஸம்பூதவாதோத்பூத த்ருணாந்யபி/
புண்யலோகம் கமிஷ்யந்தி புநராவ்ருத்தி துர்லபம்//

- கருட புராணம்

“உருத்திராக்க மரத்தினின்று உண்டாய வாயுவினால் அடியுண்ட புற்களும் பிறவியில் மீண்டு வராதிருக்கும் நெறியைப் பாலிக்கும் புண்ணியவுலகத்தை அடைகின்றன” என்று கருட புராணம் சொல்லுகின்றது.

ஸூசிர்வாப்யாஸூ சிர்வாபிஹ்யபஷயஸ்யச பக்ஷக;
ம்லேச்சோவாப்யத சண்டாளோ யுக்தோவா ஸர்வபாதகை;
கண்டே ருத்ராக்ஷமாபத்ய ஸ்வாபி ம்ரியதே யதி/

-ஸ்காந்தபுராணம்

“சுத்தனாயிருந்தாலும், அசுத்தனாயிருந்தாலும், உண்ணத்தகாத வற்றை உண்டவனாயிருந்தாலும், மிலேச்சனாயிருந்தலும், சண்டாளனாயிருந்தாலும், சமஸ்தபாவங்களோடு இசைந்தவனா யிருந்தாலும் அவன் உருத்திராக்க தாரணத்தினால் உருத்திரன் ஆகின்றான். கழுத்தில் உருத்திராக்கம் கட்டப்பெற்ற நாயும் இறக்குங்கால் உருத்திரத்துவத்தை அடைகின்றது. மனிதர்

முதலாயினோர் தரிப்பின் அதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?" என்று ஸ்காந்த புராணம் கூறுகின்றது.

ய; கண்டார்ப்பிதருத்ராக்ஷோ ஸ்வாநோபி ம்ரியதே யதி/
ஸருத்ரபதமாப்நோதி கிம்புநர் மா நுஷாதய;//

- காலோத்தர ஆகமம்

"கழுத்திலே உருத்திராக்கம் கட்டப்பட்ட நாயும் இறக்குங்கால் உருத்திர பதத்தை அடைகின்றது" என்று காலோத்தர ஆகமம் கூறுகின்றது.

மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே

என்று சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் சொல்லுகின்றது. வடமொழியில் உள்ள சிவஞானபோதத்துக்கு உரை செய்த சூரியகோயில் ஆதீனத்தின் தாபகரான சதாசிவ சிவாச்சாரியாருக்கு அடுத்ததாக ஆதீனகர்த்தராக விளங்கிய சிவாக்கிரயோகி அவர்கள் அவருடைய சிவஞான போத இலகு தீகா என்ற சிற்றுரையில் இதற்கு விளக்கம் கொடுக்கும்போது "சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் ஆகியன சாதி, தொழில் மற்றும் ஒழுக்கநெறி பேதமின்றி யாவராலும் அணியத்தக்கன" என்று கூறுகின்றார்.




**Ramanan Ramachandran**
Real Estate Broker
Dir: 416-670-6467
Off: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
Independently Owned And Operated

சர்வம் சிவமயம்

# தியானம் செய்யும் போது நம் உடலில் ஏற்படும் மாற்றங்கள் என்ன?

சி. சி. வரதராசா J.P.
'சமூகமணி', 'சிவஞானச் செல்வர்'

நம் இதயத் துடிப்பு ஒரு நிமிடத்திற்கு சராசரி 72 என்பதை நாம் அறிவோம். தியானம் செய்யும்போது நம் இதயத் துடிப்பு நிமிடத்திற்கு 69 தான். ஒரு நிமிடத்திற்கு மூன்று இதயத் துடிப்புகள் குறைகின்றன. இதயத் துடிப்பு குறைந்தால் மனிதனின் ஆயுள் அதிகரிக்கும். அது மட்டுமல்ல நிமிடத்திற்கு 18 முறை இயங்கும் நுரையீரல் 11 முறை மட்டுமே இயங்குகிறது.

நாம் தியானம் செய்யும்போது அமைதியான இடத்தில் இருந்து, தெய்வீக சிந்தனையுடன், மனதை ஒரு நிலைப்பாட்டில் வைத்துக்கொண்டு தியானம் செய்ய வேண்டும்.

உடலுக்குக் குறைந்த அளவே பிராணவாயு தேவைப் படுகிறது. இரத்தத்தில் உள்ள லாக்டேட் என்ற பொருளும் குறைகிறது. மண்டை ஓடுகளில் உள்ள தசைகள் தான் லாக்டேட்டை உற்பத்தி செய்கின்றன.

இந்த லாக்டேட் இரத்தத்தில் அதிகரித்தால் மனிதன் பதற்றமடைவான். இதனால் வீண் கவலை, கோபம், அச்சம் போன்றவை ஏற்படுகின்றன. தியானம் செய்பவர்களுக்குப் பதற்றம் ஏற்படுவதில்லை. அதனால் பாதிப்பும் இல்லை. தியானத்தின்போது நம் மூளை ஆல்ஃபா மற்றும் தீட்டா என்னும் அலைகளை உற்பத்தி செய்கிறது. நாம் செய்யும் தியானத்தின்போது மூளை ஓய்வெடுக்கிறது. மன உளைச்சல் தவிர்க்கப்படுகிறது.

தியானத்தின்போது மனதைக் கட்டுப்படுத்திவிட்டால் மகத்தான செயல்களைச் செய்து விடமுடியும். அந்த மனக்கட்டுப்பாடு தியானத்தின் மூலமே சாத்தியமாகும்.

தன் வழியே செல்லும் தீய மனத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மன மாசுகளை அகற்றி, மனத்தைப் புனிதமாக்கி, வெண்மையாக்கி மனித சமுதாயத்தின் மேன்மைக்கு மனிதனை இட்டுச் செல்வதே உண்மையான தியானம் ஆகும்.

---

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதல்மடவார் விசும்பூடு வந்திழிந்தார்.

- திருநாவுக்கரசு நாயனார் புராணம்

# மது அருந்துதல்

சுவாமி சிவானந்த சரஸ்வதி

"உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டா தார்" - குறள்

ஒரு நண்பனை மற்றொரு நண்பன் வரவேற்கும் போது "ஜெய் ஸ்ரீ கிருஷ்ணா. ஜெய் ஸ்ரீராமா என்று அழைப்பதில்லை. ஆனால் ஒரு பாக்கட் சிகரட், ஒரு போத்தல் விஸ்கியுடன் அவனை வரவேற்கிற காலமாகிவிட்டது! நாயுடு அவர்களே! வாருங்கள்! சிகரட் குடியுங்கள் ஒரு டிரிங் சாப்பிடுங்களேன் என்று அவன் கூறுகிறான்!

மது ஒரு பெரும் பிசாசு. ஒரு தடவை ஒருமனிதனின் சரீரத்தினுள் புகுந்து விட்டால் பிறகு அவனை அது விடுவதில்லை! பெரும் குடிகாரனாகிக் குப்பிமேல் குப்பிகளாகக் குடித்து விட்டுக் கண்தலை தெரியாமல் நிர்வாணமாகச் சாக்கடையிலே வந்து விழுந்து கிடக்கும் அளவுக்கு மனிதனை ஆக்கிவிடும் ஆற்றலுடையது மது. தன் உடல் வலுவடையும் எனும் மருட்சியால் முதலில் சிறிது குடிக்கத் தொடங்கும் மனிதன் முடிவில் பெருங்குடிகாரனாகி விடுகிறான். மது அருந்துதல் ஒரு தீய பழக்கமாக மாறிவிடுகிறது. மூளையிலுள்ள நரம்புகளைச் சிதைவுறச் செய்யும் பெருவிஷம்தான் ஆல்கஹால். இந்த விஷமே எல்லா மது வகையிலும் கலந்து நிற்கிறது. இதனால் பல்வேறு நரம்புவியாதிகள் ஏற்படுகின்றன. ஒரு குடிகாரனை நல்ல நிலைக்குக் கொண்டு வருவது மிகக் கடினம். அந்தத் தீயபழக்கம் அவன் மீது ஆட்சி செலுத்தத் தொடங்கி விடுகிறது. நற்போதனைகள் எல்லாம் அவன் செவியில் ஏறாது. தான் கெட்டுப்போவதுடன் நில்லாது சமூகத்திற்கும் அவன் பெரும் தொல்லையாக விளங்குகிறான். குடிகாரக் கூட்டத்தினால் நாட்டிற்கு நன்மை விளைவது என்பது ஆகாத காரியம். ஆரம்பத் திலேயே மிகவும் ஜாக்கிரதையுடன் இருங்கள். குடிகாரர்களின் தொடர்பை அறவே ஒழித்து விடுங்கள்.

பிராந்தி, கள், சாராயம் முதலிய தீயபழக்கமுடையவர்கள் அச்சிறுமையை அகற்றி நிறுத்த எண்ணினால் கடவுளின் முன்பாக நின்று அவ்விழிந்த பழக்கத்தை அந்த நிமிடமே நிறுத்தி விட்டதாகச் சபதஞ் செய்ய வேண்டும். உங்களது முடிவை உங்களது நண்பர்களிடம் தெரிவியுங்கள். மறுபடியும் மனம் பழைய தீயபழக் கத்தை நாடிச் செல்லும் நேரத்தில் நீங்கள் வெட்கப்படுவீர்கள். பல தடவைகள் தோல்வியடைந்தாலும் மேலும் மேலும் முயற்சி செய்யுங்கள். சத்சங்கத்தை நாடுங்கள். சமய நூல்களைக் கற்க முற்படுங்கள். தீயபழக்கங்கள் எல்லாம் தானாகவே தொலைந்து போகும்.

# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

இடம்: மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயம்

### சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையை 29-07-2009 புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 7 மணிவரை பேரவையின் திருக்கூட்டத்தினர் கொண்டாடினர். தெரிந்தெடுக்கப்பட்ட சுந்தரரின் தேவாரங்கள் ஓதப்பட்டன. விசேட அபிசேக ஆராதனைகளும் செய்யப்பட்டன. பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆசிரியரும் செயலாளர் சிவ. முத்துலிங்கம் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

### சற்சங்கம்

பேரவை ஆத்மீக தாகம் உள்ளவர்களின் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகச் சற்சங்கத்தை மாதம் இருமுறை நடத்திவருகிறது. 01-04-2009 இல் இருந்து 30-09-2009 வரை யோகானந்த பரமகம்சர், நாவலர் பெருமான் சேஷாத்திரி சுவாமிகள், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் போன்றவர்களின் வரலாறுகளைப் பற்றிக் கலந்துரையாடிய பின் பெரியபுராண அடியார்களில் சேக்கிழார், காரைக்கால் அம்மையார் பட்டினத்தார், சேரமான் பெருமாள்நாயனார், நம்பியாண்டார் நம்பி, நக்கீரர் போன்றவர்களின் வரலாறுகள் கலந்துரையாடப்பட்டன. தொடர்ந்து திருமந்திரப் பாடல்களுக்கு விளக்கவுரை அளிக்கப்பட்டு வருகின்றது. இந்துசமயப் பேரவையின் உறுப்பினர் சு. சிவதாசன் ஆசிரியரும், செயலாளர் சிவ முத்துலிங்கம் அவர்களும் முன்னின்று இதனை நடத்தி வருகின்றனர்.

### 10ஆவது வருடமாக திருமுறை முற்றோதல்

பன்னிரு திருமுறை முற்றோதல் 10ஆவது வருடமாக பேரவையின் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றது. திருமுறைப்பூர்த்தியை ஒட்டி திருமுறை விழா நடைபெற உள்ளது. திருமுறை விழாவையொட்டிச் சிறார்களுக்கு மத்தியில் வழமைபோல எழுத்துப்பரீட்சை, திருமுறை மனனப் போட்டி பேச்சுப்போட்டி ஆகியன நடத்தி முதன்மைப் பரிசு பெற இருப்பவர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

### திருவாசகம் முற்றோதல்

துரந்தை (ரொறன்ரோ) சிதம்பர ஆதி நடராசர் ஆலயத்தில்

பேரவையின் திருக்கூட்டத்தினர் மாதம் தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் திருவாசகம் முற்றோதி வருகின்றார்கள். நடராசப் பெருமானுக்குச் சிறப்புப்பூசைகள் ஆலயகுருக்களால் நடத்தப்படுகின்றன.

**திருவாசகம் முற்றோதல்**

29-08-2009 சனிக்கிழமை ஆவணி மூலத்தன்று பேரவையின் திருக்கூட்டத்தினரால் சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நடத்தப்பட்டது.

**திருமுறைத்திருவிழா**

மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவத் திருவிழாக்களில் திருமுறை திருவிழாவை பேரவையின் திருக்கூட்டத்தினர் 2-09-2009 புதன்கிழமை வெகுசிறப்பாக நடத்தினர். திருமுறை நூல்களைச் சுமந்தபடி திருமுறை ஓதிக் கொண்டு வீதி வலம் வந்த காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.



திருமுறைத் திருவிழாவில் ஆசிரியர் செ. சோமசுந்தரம்
சேக்கிழார் வேடந் தரித்தல்



அருள்மிகு மேருபுரம் பத்திரகாளி ஆலயத்தில் இந்து சமயப் பேரவை செய்வித்த திருமுறைத் திருவிழா

## திரு. கனகசபை கந்தையா அவர்களின் பவள விழா



பவள விழாவில் ஆசிரியர் த. சிவபாலு உரையாற்றுகின்றார்




**திரு. கனகசபை கந்தையா அவர்களின் பவள விழா**

பேரவையின் உப பொருளாளர் திரு. க. கந்தையா அவர்களின் பவள விழா 12.09.2009 சனிக்கிழமை பிரார்த்தனை, பூசை முதலியவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. விழாவுக்குத் தலைவர் வி. கந்தவனம் தலைமை தாங்கினார். திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம் பேரவையின் சார்பில் வாழ்த்து மடலைப் பாடி வழங்கினார். ஆசிரியர் செ. சோமசுந்தரம், திரு. தி. சிவயோகபதி, லிப்டன் கம்பனி முன்னைநாள் வடபகுதிப் பொறுப்பாளர் திரு. செ. சிவலிங்கம், அதிபர் திரு. த. சிவபாலு மற்றும் விழாநாயகர் கந்தையா குடும்பத்தினர் முதலியோர் பாராட்டுரைகள் நிகழ்த்தினர். அருட்கவி ஞானக்கணேசன் வாழ்த்துக் கவி பாடி வழங்கினார். விருந்துபசாரத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

**ஆத்மஜோதியார் நினைவு**

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவைத் தாபகரும் ஆத்மஜோதி சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரும் உலகறிந்த ஆத்மிக வள்ளலுமாகிய அமரர் நா. முத்தையா அவர்களின் 14ஆவது நினைவு தினம் 27.09.2009 ஞாயிற்றுக்கிழமை அனுட்டிக்கப்பட்டது. தலைவர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் நடந்த



ஆத்மஜோதியார் நினைவுப் பிரார்த்தனை



ஆத்மஜோதியார் நினைவுரை

இந்நினைவுக் கூட்டத்தில் திருமதி கமலாதேவி மகாலிங்கம், ஆசிரியர் செ. சோமசுந்தரம், திரு. க. கந்தையா, திருமதி இராசமலர் சின்னராசா, திருமதி இராஜலட்சுமி சண்முகலிங்கம், டாக்டர் திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர், திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம், பக்திப் பண்ணரசு திரு. கதிர் சுந்தரலிங்கம் உட்படப் பலர் ஞானசுரபி அவர்களின் தொண்டுகளையும் குணாதிசயங்களையும் நினைவுகூர்ந்தனர்.

---

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅர சமர்ந்திருந்தார்.

- திருநாவுக்கரசு நாயனார் புராணம்

# திருமதி கௌசல்யா சுப்பிரமணியன் அவர்கள் 'கலாநிதி' யானார்



பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியன் அவர்களின் துணைவியாரும் இசைத்துறையிலே உயராய்வை மேற்கொண்டிருந்த வருமாகிய திருமதி. கௌசல்யா அவர்கள் அவ்வாய்வின் பெறுபேறாக அண்மையில்' (June-2009) 'கலாநிதி' (Ph.D)ப் பட்டத்தைப் பெற்றுள்ளார். 'தமிழின் இசைப்பாடல் வகைகள் - அறிவனாரின் ***பஞ்சமரபு*** நூலை மையப்படுத்திய ஒரு நுண்ணாய்வு' என்ற தலைப்பில் இவர் தமிழகத்திலுள்ள அன்னைதெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வேடே இவருக்கு இப்பட்டத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது. இந்த ஆய்வேடு தேர்வாளர்களால் **உயர் தகுதியுடையது** என விதந்துரைக்கப்பட்ட சிறப்புடையதாகும்.

கலாநிதி கௌசல்யா அவர்களுடைய இந்த ஆய்வுமுயற்சி யானது தமிழரின் இசைமரபின் தொன்மை மற்றும் தொடர்ச்சி என்பவற்றை வரலாற்று நிலையில் தெரிந்து தெளிந்து கொள்வதற்குத் துணைபுரிவதாகும். குறிப்பாக, இசைப்பாடல்களின் இயல்பு, அவை பண்டைத்தமிழர் மத்தியியில் நாட்டாரிசை நிலையில் உருவாகிப் பயின்ற முறைமைகள், பின்னர் செவ்வியலாக அவை எய்திய வளர்ச்சிகள் என்பவற்றை இவ்வாய்வேடு இனங்காட்டிநிற்கிறது.

இவ்வகையில் குறிப்பாக, தமிழரின் பண்டைய கூத்துமரபுகளிற் பயின்ற குரவை மற்றும் வள்ளை முதலிய பாடல் வகைகள் முதல் கடந்த சில நூற்றாண்டுகளில் உருவாகி வளர்ந்த கீர்த்தனை வரையிலான இசைப்பாடற்பரப்பின் வரலாறும் வளர்ச்சியும் இவ்வாய்வேட்டில் நோக்கப்பட்டுள்ளன. மேலும் கலிப்பா மற்றும் பரிபாடல் ஆகிய பாடல்வகைகள், பக்தி இலக்கியங்களின் பண்சுமந்த பாடல்கள், வண்ணம் மற்றும் சந்தம் ஆகிய பெயர்களில் வழங்கும் திருப்புகழ் முதலிய பாடல் வடிவங்கள், சிந்துப்பாவகைகள், நாடகப்பாடல்கள் ஆகியனவும் இவ்வாய்வில் நுண்ணாய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடல் வகைகளின் தொடர்ச்சியும்

வளர்ச்சியுமாக **கீர்த்தனை** என்ற வடிவம் உருப்பெற்ற வரலாறு இவ்வாய்வேட்டிலே சிறப்பாக இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி கீர்த்தனை வடிவம் சமகாலத்தில் அரங்கிசை(மேடைக்கச்சேரி), நடனம், கதாகாலட்சேபம், நாடகம், திரைப்படம் முதலிய பல தளங்களிலும் பயின்றுவரும் நிலைகளையும் இவர் சிறப்பாக வகைப்படுத்தி நோக்கியுள்ளார்.

இவ்வாறான ஆய்வுச் செயற்பாட்டிற்குத் தமிழில் இன்று எமக்கு ஓரளவு முழுமையுடன் கிடைக்கும் ஓரே இசையிலக்கண நூலான அறிவனாரின் ***பஞ்சமரபு*** முக்கிய ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ***தொல்காப்பியம்*** மற்றும் ***யாப்பருங்கலம்*** முதலிய இயற்றமிழிலக்கணங்கள் துணைநிலை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கௌசல்யா அவர்களின் இந்த ஆய்வு முயற்சி தமிழரின் இசைமரபு தொடர்பான ஆய்வுப்பார்வைகளை ஆழப்படுத்தியதோடு அதன் எல்லைகளை அகலப்படுத்தியுமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆத்மஜோதி' இதழ் முனைவர் கௌசல்யா சுப்பிரமணியன் அவர்களை வாழ்த்தி இசைத்துறைக்கு அவர் செய்த முதன்மையான ஆய்வுப்பணி குறித்து மகிழ்ந்து அவரைப் பாராட்டுகின்றது.

- ஆசிரியர்

---

45ஆம் பக்கத் தொடர்ச்சி

தேவையுள்ள நல்ல செயல்களுக்காக வழிபடும்போது விண்ணப் பிக்கலாம்.

பிடிய தனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடுதனதடி வழிபடும் அவர் இடர்
கடி கண பதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழ
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞான மதம் ஐந்து கரம் மூன்று விழி நால் வாய்
யானை முகனைப் பரவி அஞ்சலி செய்கிறப்பாம்

என்று பாடி வணங்குக!

# சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரனார்

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் மொழி, தமிழர் சமயம், தமிழ்ப் பண்பாடு, வழக்காறு, வாழ்வியல், அறிவியல், தொழில்நுட்பம், வானியல், சமூகவியல், என அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய நூல் ஒன்றை - திருத்தொண்டர் புராணம் - இன்று வாழும் நமக்காக, நம்முடைய எதிர்காலத் தலைமுறையினருக்காக ஆக்கியருளியவர் சேக்கிழார் பெருமான்.

அந்த நூலைப் படித்து, ஈடுபட்டு, சேக்கிழாரின் புலமையில் மயங்கி, சேக்கிழாருக்கு அடிப்பொடியாக இருக்கும் பேறு பெற்றவன் என வாழ்பவர் தி. ந. இராமச்சந்திரனார்.

தமிழில் புலமை, ஆங்கிலத்தில் அருவியாகப் பாயும் கருத்தாழம் மிக்க சொல்லாட்சி, வடமொழியில் தேர்ச்சி, இவை சேக்கிழார் அடிப்பொடியின் அணிகலன்கள்.

1990களின் தொடக்கத்தில், காந்தளகத்திற்கு வரத்தொடங்கிய பொழுது, அன்னாருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது.

ஈழத் தமிழர் மீதும், அங்கு வாழ்ந்த, வாழ்கின்ற புலமைசார் பெருமக்கள் மீதும் அளவற்ற அன்பும், மதிப்பும், மரியாதையும், ஈடுபாடும் கொண்டவராக என்னிடம் பேசுவார். அங்கு வாழ்ந்த, வாழ்கின்ற அறிஞர்களின் படைப்புகள் ஆக்கங்கள் யாவற்றையும் பட்டியலிட்டு மனப்பாடமாக வைத்திருந்து என்னிடம் விசாரிப்பார்.

தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்கள் வெளியிடவிருந்த நூல்களில் ஒன்றாக, வளையாபதி காப்பியத்தைக் குறிப்பிட்டுள்ளதாகக் கூறிய அவர், யாழ்ப்பாணத்தில் அக்காப்பியத்தின் படியைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு என்னிடம் கேட்டார்.

நூல் நிலையங்கள் எரிந்திருந்தன. புலமைச் சான்றோர்கள் புலம் பெயர்ந்திருந்தனர். ஏட்டுச் சுவடிகள் கேட்பாரற்றுக் கிடந்தன. வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கே தட்டுப்பாடு இருந்தது. நாளும் பொழுதும் வாழ்வா, சாவா என அங்குள்ள மக்கள் அலமந்து இருந்த காலப்பகுதி.

வளையாபதியை எங்கே தேடுவேன்? யாரிடம் கேட்பேன்? யாருக்கு எழுதுவேன்? எவர் தத்தம் சொந்த முகவரியில் இருந்தார் எழுதுவதற்கு? இந்தச் சலிப்புகளைச் சேக்கிழார் அடிப்பொடியிடம் நான் சொல்லவில்லை. யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பும், சேக்கிழார் அடிப்பொடியை நேரே அங்கு அனுப்பித் தேடச்சொல்லும் காலம் வரும் எனக் காத்திருந்தேன்.

ஆறாம் திருமுறைக்கு ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்துள்ளேன், அச்சிட்டு, தஞ்சாவூரில் 1995 தை முதல் வாரத்தில் நடைபெறும் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் முதல் நாளன்று வெளியிட வேண்டும் என 1994 கார்த்திகையில் அந்நூலின் கையெழுத்துப் படியுடன் என்னிடம் வந்தார். அயராது உழைத்தேன், அழகாகப் பதிப்பித்தேன். தருமை ஆதீன வெளியீடான அந்த நூலைத் தஞ்சாவூரில் தமிழக முதலமைச்சர் வெளியிட்டு வைத்தார்.

அச்சுவேலிக் குமாரசாமிக் குருக்கள் எழுதிய சிவபூசை விளக்கம் என்ற நூலை அச்சிட்டுப் பதிப்பிக்கும்படி சேக்கிழார் அடிப்பொடி என்னிடம் தந்தார். செய்து கொடுத்தேன்.

தருமை ஆதீனத்தின் உலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி மன்றத்தின் தலைவரான இவரைத் தவத்திரு குருமகா சந்நிதானம் அவர்கள் மிகவும் அன்போடும், மதிப்போடும் பேணிவந்தார்கள்.

1996ஆம் ஆண்டு தைப்பூசத்தன்று தருமை ஆதீன வளாகத்தில், பன்னிரு திருமுறை முழுவதையும் ஓராண்டு காலத்துள் அச்சிட்டு வழங்கும் பணியைத் தொடக்கத் திருவருள் கூட்டியது. ஓராண்டுக் காலத்தில் 12,846 பாடல்கள் 1,284 தலைப்புகளில் பன்னிரெண்டு திருமுறைகளாக பதினாறு பகுதிகளில் அச்சிட்டு வெளியிடும் பாரிய முயற்சியின் தொடக்க நாள் அது.

13 ஆண்டுகள் கடந்தன, 15 பகுதிகள் வெளிவந்தன 16ஆவது பகுதி இன்னமும் வெளியாகவில்லை. ஒவ்வொரு பகுதிக்கும் அச்சுமுன் தயாரித்து, மெய்ப்புப் பார்த்து அச்சிடக் கொடுக்கும் வரை பல்வேறு தடங்கல்கள் வந்தபொழுதெல்லாம், தளர வேண்டாம் நான் இருக்கிறேன் என ஒவ்வொரு முறையும் என்னை

உற்சாகப்படுத்தியவர் சேக்கிழார் அடிப்பொடி அவர்கள்.

தன் உடல்நலக் குறைவையும் நோக்கார், பயணத் தொலைவையும் நோக்கார், செலவுகளைக் கணக்கில் கொள்ளார், சென்னைக்கு வருவார், மயிலாடுதுறை செல்வார், பன்னிரு திருமுறைகள் முழுமையாக வெளிவந்துவிடவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். தவத்திரு குருமகா சந்நிதானம் அவர்களிடம் நின்றும், இருந்தும், கிடந்தும், இரந்தும் தொண்டர் அடிப்பொடியாகிப் பணி முடிக்க வழிசெய்தார். நிதிப் பற்றாக்குறையைத் தானே ஈடுசெய்தார். மெய்ப்புப் பார்ப்போரை ஏற்பாடு செய்தார். நெருடல்களை நீக்கினார், சுழலும் சக்கரத்திற்கு எண்ணெய் ஆனார். சேற்றில் புதைந்த பொழுதெல்லாம் சக்கரத்தைத் தானே தோள்கொடுத்து நிமிர்த்தி விட்டார். அவரது ஒருங்கிணைப்பும் தளராத முயற்சியும் எனக்கு உற்சாகமாயின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் சென்னை வந்திருந்தார். அவருக்குச் சென்னையில் வாழ்ந்த பல்கலைக்கழக முன்னாள், அந்நாள் துணைவேந்தர்கள், அறிஞர்கள் யாவரையும் அழைத்து வரவேற்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தேன்.

தமிழறிஞர் வ. ஐ. சுப்பிரமணியம், பொறியியல் அறிஞர். வா. செ. குழந்தைசாமி போன்ற தமிழ்நாட்டின் புலத்துறை முற்றிய, கற்றுத்துறைபோகிய, தலைசிறந்த அறிஞர்களுக்கு முதுமுனைவர் பட்டம் வழங்குவதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழக்கமாகக் கொண்டிருப்பதை என்னிடம் துணைவேந்தர் கூறினார்.

நடுவண் அமைச்சராகவும், ஆளுநராகவும் பணியாற்றிய சான்றோர், சி. சுப்பிரமணியம் அவர்களின் பெயரை எடுத்துக் கூறினேன். அவரிடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரை அழைத்துச் சென்றேன்.

தஞ்சாவூரில் ஒரு பெரியவர் இருக்கிறார். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். சைவத்திலும் தமிழிலும் ஆழங்கால்பட்டவர். ஈழத்தமிழ்ப் புலமையானவர்களைப் பெரிதும் மதிப்பவர். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் ஆகிய தகைமையாளர். அரிய

பல நூல்களின் சேகரிப்பாளர். சிறந்த மொழிப்பெயர்ப்பாளர். தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அவருக்குச் சிறப்புச் செய்யவில்லையே என்பதுதான் அவருடைய தனிச்சிறப்பு. அத்தகையவரே சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரன். அவருக்கு முதுமுனைவர் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கினால் அப்பல்கலைக்கழகத்திற்குதான் பெருமை எனச் சொன்னேன்.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை யாழ்ப்பாணம் திரும்பினார். பல்கலைக்கழகப் புலமைக் குழாமுடன் கலந்தார். 1999ஆம் ஆண்டு சி. சுப்பிரமணியத்திற்கு முதுமுனைவர் பட்டத்தை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தீர்மானித்தது. 2000ஆம் ஆண்டில் முதுமுனைவர் பட்டத்தை சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரனுக்கு வழங்கியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், சேக்கிழார் அடிப்பொடியின் மென்மையையும் மேன்மையையும் அறிந்தவர். பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளைக்குத் துணையாக நின்று, சேக்கிழார் அடிப்பொடி அவர்களை யாழ்ப்பாணத்தில் வரவேற்று, பல்கலைக்கழகம் பட்டம் வழங்கிய பின், துணைவியாரையும் அவரையும் யாழ்ப்பாணம் முழுவதும் உலாவரச் செய்து, பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பியவர் சிற்றம்பலமே.

தஞ்சாவூரில் சேக்கிழார் அடிப்பொடி அவர்களின் இல்லத்திற்கு நான் செல்லும் பொழுதெல்லாம், தலைவாயிலில் அந்த ஊஞ்சலில் வெற்றிலைப்பெட்டியுடன் அவர் இருக்க, அவரைச் சுற்றி அறிஞர் குழாம் ஒன்று அவரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவருடைய துணைவியாரின் விருந்தோம்பலால் நெகிழ்ந்து போயிருக்கிறேன். அவருடைய மக்கள் மூவரும் சென்னையில் எனக்கு ஆற்றிவரும் நன்மைகள் ஏராளம்.

---

திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்
கருகாக எழுந்தருளி **எங்குற்றார் அப்பர்என**
உருகாநின் றும்அடியேன் **உம்அடிகள் தாங்கிவரும்**
**பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேன்என்றார்.**

- திருநாவுக்கரசு நாயனார் புராணம்

# Saiva Thamil Cultural Immersion Course for Kids

**I am happy to know that Dr. Lambotharan in concert with Kavignar V. Kandavanam and Dr. A. Shanmugavadivel is starting classes for youths and children to teach them their roots and glorious heritage.**

**As requested by Dr. Lambotharan, I am giving below my opinion about the brochures sent to me.**

1. Tamil language is part of the culture. If possible, accommodate teaching Tamil in the class. To learn, sing and appreciate the Thirumurais, it will be useful.

2. The second sentence in Tamil, "Molith thadaiyai udaiththerivom .... மொழித் தடையை உடைத்தெறிவோம் - may be changed and put in different words. It sounds a little aggressive, and also may go against the use of Tamil language. It may be changed as "மொழி தெரியாதெனினும் ......".

**Statement of Faith**

1. The classes are for kids and teens of modern age in Canada. They should be given rational explanations and materials to attract their intellect. They will not blindly believe anything. They should be made to develop faith.

2. "Texts of Truth Revealed" is a literal translation of "Mey kanda sastras". I would prefer to say simply as, "Fourteen Mey kanda sastra books and twelve volumes of Thirumurai books" (mei kanda sastras are books by saints and it may be difficult to consider them as revelations, by the youths).

3. By tradition, Vedas and Agamas are considered as God given books, and also as authorities for Saiva religion. But everyone knows that Vedas also contain contradictions, and views contrary to Saiva

religion. So we cannot STRESS on their authority to Saiva religion. Agamas also have contradictions, but comparatively less. The 14 Meikanda Sastras and the 12 Thirumurais have no such contradictions. They are the real authorities to Saiva religion. (When we say that Vedas and Agamas came from God, it means they were given by Him through the saints, like the Thirumurais given by Him, through the Nayanmars).

4. Srila Sri Arumuganavalar realized it and wrote his Saiva Vinavidai Book 1 for the beginners. In it he has written about various aspects of Saiva religion, and not about Vedas and agamas. Lastly he has written of Thevaram and Thiruvasagam as Thamil Vetham. (It is to be noted that St. Zekkilar also refers to them as Thamil Vedam). In the last question (135) of this book he writes as, "Those who chant the Thamil Vetham regularly with devotion will enjoy Divine bliss under the sacred feet of Sivaperuman". By this, he has also shown how the children should be first introduced to saiva religion. It is better to follow his line of approach.

5. In Saiva Vinavidai Book 2, which is for religiously matured, he mentions of Vedas and Agamas as authorities. He also writes as, "Thevaram and Thiruvasagam are the only two books of Thamil Vetham which give the Gnanakanda views of Vedas without contradicting Sivagamas" (Question 91). By writing it, he has also pointed out that Thevaram and Thiruvasagam stand higher than Agamas and Agamas are above Vedas.

6. It appears to me that too much is written (Sivamoorthams, Sakthy forms etc.,) in this statement. In my opinion this "Statement of Faith" is NOT suitable for the present time. It contains contrary views, and would create confusion in the minds of the students.

Few points in simple language relating to our religion, our God, Saiva practice, devotional works of Thirumurais, philosophical works of meykanda sastras etc, would be enough.

**Vedantamum Siddhantamum (Thamil Article)**

Regarding the above article, sent separately, it appears that that the title is not consistent with the contents. The contents speak more of religious personalities and less, very less, of Vedanta and Siddhanta. Also, it lacks continuity and clarity at some places.

The opening sentence of the first paragraph speaks of the Vedanta tradition and Siddhanta tradition of Saiva religion. There is nothing called Vedanta tradition in Saivam. This paragraph also gives the impression that Saiva Siddhantis are unnecessarily entering into fight with the Vedantis. I don't think it is true. The problem is that most Saivites do not know clearly Vedanta or Siddhanta, and consume Vedanta views fed to them as the philosophical views of Saiva religion.

Perhaps it may be useful to write separately of the religious dignitaries.

I would appreciate your writing to enlighten the Saivites on their religious philosophy which is (Meykandar school of) Saiva Siddhanta.

Love & regards

Ganesalingam

---

46ஆம் பக்கத் தொடர்ச்சி

எடுத்து தீப்பந்தம், இளநீருடன் சந்தியில் வைக்கும் வழக்கம் உண்டு. இது பகல் வேளையில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளையில் நடத்துவர். இதில் மாமிச உணவு மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவர் ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும்போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்து உணவு வகை தயாரிப்பதில்லை.

# திருமுறைகளின் தாற்பரியம்

திரு. ச. அழகரத்தினம்
(இளைப்பாறிய சுங்க இலாகா பிரதிப் பணிப்பாளர்)

சென்ற இதழ் தொடர்ச்சி

சந்தேகம் 5: தேவார தோத்திரங்களைப் பண்ணும் இசையும் பொருந்தப் பாடினாற்றான் பயனுண்டு என்று சொல்லப்படுகிறது. இதில் பொருள் உண்டா?

தெளிவு: ஆம், இதிற் பொருளுண்டு. இந்தப் பிரபஞ்சத்தின் மையம், இருப்பு, இயக்கம் அனைத்தும் ஒரு நாதமயமாக இருக்கிறது என்று வேதம் சொல்கிறது. நாதத்திலிருந்தே பிரணவம் (விந்துசுத்தமாயை) தோன்றிற்று. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், பஞ்சபூதங்கள் அனைத்தும் ஓர் இசையின் அடிப்படையிலேயே இயங்குகின்றன. இந்த ஓசையே சத்தப்பிரமம் என்று சத்தப்பிரமவாதிகள் கூறுகின்றார்கள். இந்த ஓசை பல்வேறுபட்ட நாத அதிர்வுகளைக் கொண்டது. ஒவ்வொரு அதிர்வும் ஒவ்வொரு பண்ணில் அமைவுபெற்றுப் பிரபஞ்ச ஆக்கம், நிலைபேறு, அழிவுக்கு ஆதாரமாக இருக்கிறது. இவற்றை மந்திரஓசை மூலமாக அணுக முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. குறிப்பிட்ட ஒரு பண்ணோடு இசைக்கின்ற ஒலி அப்பண்ணின்பாற் பொருந்திய அதிர்வுச் சக்தியைத் தட்டி எழச்செய்கிறது. எழுச்சி பெற்ற சக்தியானது அந்தப் பண்ணுக்கு மெருகூட்டிச் சித்தத்தை நிறைவு செய்கின்றது.

எனவே பண்ணும் பொருளளவில் முக்கியம் என்று கொள்க. உதாரணமாக கொடியேற்ற விழாவின் போது அட்டதிக்குப் பாலகர்களை வருவிக்கக் குறிப்பிட்ட பண்களையே உரைக்குமாறு ஆகமம் சொல்கிறதேயொழிய ஒரு குறிப்பிட்ட தேவாரத்தையோ மற்றும் தோத்திரத்தையோ ஓதும்படி சொல்லவில்லை. குறிப்பிட்ட பண்ணை இசைக்க அதற்குரிய தெய்வம் தலைப்படுகிறது.

இதனால் ஒரு தெய்வத்தின் பெறுபேற்றைப் பெறவேண்டின் அதற்குரிய பண்ணில் வேண்டிய பொருளடங்கிய தோத்திரபாராயணம் செய்யவேண்டும் என்பது தெளிவு. அற்புத நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஆதாரம் இதுவே. ”பண்ணாரப் பாடவல்லார்க்கில்லைப் பாவமே” என்பது சம்பந்தர் வாக்கு.

சந்தேகம்: நாயன்மார்களது திருவாக்குகள் அற்புதங்களாக மலர்ந்தமைக்கு ஏதும் விளக்கம் உண்டா?

தெளிவு: விளக்கம் முழுமையாகப் பெறுதற்கில்லை. ஓரளவில் உற்றுணர்தல் தகும்.

சைவசித்தாந்தத்தில் நான்கு வாக்குகள் பற்றிச் சொல்லப்படுகிறது. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனப்படும் வாக்குகள் சுத்தமாயையிலிருந்து தோன்றுகின்றன. சுத்தமாயை என்பது பரிக்கிரகசக்தி, குண்டலினிசக்தி, விந்து, பிரணவம், எனப் பலவாறாகக் கருதப்படுகிறது. சுத்தமாயையில் இருந்து உற்பத்தியாகும் வாக்குகளே சத்தப்பிரபஞ்சம், அர்த்தப்பிரபஞ்சம் எனும் சித்துச் சடப் பிரபஞ்ச விருத்திகளுக்கு மூலகாரணமாம். ஓம் எனும் பிரணவ ஒலியே சத்தார்த்தப் பிரபஞ்சத்தின் அதிட்டான வஸ்து என்கிறது வேதம்.

இவற்றின் தன்மை விரிக்கிற் பெருகும். விளக்குதற்கும் அரிது.

இங்கு நாம் மேற்கூறிய சித்துச்சடப் பிரபஞ்ச ஆக்கத்திற்கு அடிப்படை வாக்குகளே என்பதை மனதிற்கொண்டு, மேலும் சொல்லின் தூலபரிணமங்கள் பற்றிச் சற்று ஆராய்வோம்.

சொற்களில் மூன்று விதமான வெளிப்பாடுகளை நாம் நடைமுறையில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒன்று அர்த்தமில்லாமல் அலட்டுகின்ற ஓலங்கள். இவற்றால் விசேடமான பயன் இல்லை. செவிக்கினியவை ஆக்கபூர்வமானவையாகவும், கோரமான சொற்கள் தாக்கங்களைத் தரவல்லனவாகவும் இருக்கும்.

இரண்டாவது வகை கருத்துள்ள சொற்கள். ஒருவருக்குத் தெரியாத விடயத்தைப் பற்றி மற்றொருவர் கருத்து விளங்கக் கூறும் போது கேட்பவருக்கு அவ்விடயம்பற்றி ஏலவே இருந்த அறியாமை என்ற இருள் அகல அவ்விடயம் அவருக்கு வெளிச்சமாகிறது. எனவே சொல்லினுள் ஒளி, அதாவது வெளிச்சம் இருப்பதாகக் கொள்ளலாம். ”சொல்லக விளக்கது சோதியுள்ளது” என்னும் அப்பர் வாக்கு இதுவே.

மூன்றாவது வாக்கு. உள்ளத்தில் சிதாகாசத்தில் தூண்டப்பட்ட சித்தசுத்தியுடன் கூடிய எண்ணமே சொல்லாக வடிவெடுத்து வந்து புறத்தில் வேண்டிய பொருளாகப் பரிணமிக்கிறது. இந்த வாக்கைச் சார்ந்தனவே சிவனடியார்களது திருவாக்குகள், தேவார திருவாசகங்கள் இவையனைத்தும் சித்தசுத்தி விருத்திகளே.

ஞானசம்பந்தர் ஆண்பனைகளைப் பார்த்துப் பெண்பனைகளாகுக எனச் சங்கற்பித்தார். அப்பொழுது அவர் ஆண்பனைகளைப் பெண்பனைகளாகத் தம் சித்தத்தில் கண்டார். அவரின் அகக்காட்சி வெளியே உள்ள ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியது.

சித்தத்தின் விளைவே எண்ணம் (சங்கற்பம்). நமது சித்தத்திற்கேற்றவாறே நமக்குச் சூழலும் வாழ்வும் வந்து அமைகின்றது. இன்றைய விஞ்ஞானத்தில் தலைசிறந்த ஞானிகள் "எண்ணங்களே சூக்குமப் பொருட்கள்" என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர். ஒருவரின் எண்ணம் எவ்வண்ணமோ வாழ்வும் அவ்வண்ணமே.

(புறக்கரணங்களுக்கு எவ்வாற்றானும் காண ஒண்ணாத மூலம் அகக்கண்ணுக்குப் பொருளாவது புதுமையாம்.)

சந்தேகம்: திருச்சிற்றம்பலம் என்பதன் கருத்தென்ன? திருமுறை ஓதுவதற்கு முன்னும் முடிவிவிலும் திருச்சிற்றம்பலம் என்று உச்சரிப்பது ஏன்?

தெளிவு: திருச்சிற்றம்பலம் என்பதை திரு - சித்து - அம்பலம் என்று பிரித்துப் பொருள் உணர்க. பேரறிவுவெளி, சிதாகாசவெளி, சிவஞானவெளி எனக் கருத்து உரைத்துக் கொள்க.

இதுவே சிதம்பரம் என்றும், சொல்லப்படுகிறது. இது ஒவ்வொரு சீவராசியிலும் அதன் இருதயக் குகையில் சக்திமயமான உள்ளக் கோயிலென ஒளிர்விடுகிறது. இதற்குள் உயிர்க்குயிரான சிவன் திருநடனம் புரிகிறார். அண்டத்தில் இவ்வெளி சிதம்பரத்தில் இருப்பதாக வேதம் சொல்கிறது.

நாயன்மார் அருளிப்பாடிய தோத்திரங்களின் சாரம் அனைத்தும் இங்குதான் அடக்கம். அசரீரி வாக்குகள் அனைத்திற்கும் மூலம்

இந்தச் சிதாகாசமே. அதாவது திருச்சிற்றம்பலமாம். இங்கு நடனம் புரியும் நடராசப்பெருமானே திருமுறை நாயகன் ஆவர். எனவே நாம் திருமுறைகளை இங்கு இருந்து பெறுவதற்கு வாக்கின் முதல் திருச்சிற்றம்பலம் என்று உள்ளம் ஒன்றி உரைப்பின், சிதாகாசம் திறந்து சிவஞான ஊற்றுச் செயற்படும். உண்மை ஒளியுடன் திருமுறைகள் வேண்டியவாறு ஊற்றெடுத்து வாக்கில் தொனிக்கும். இவற்றின் பயன் யாம் வேண்டிய பெறுபேற்றைத் தரும்.

திருமுறை ஓதிமுடிந்தால் திருநின்றெழுந்த திருமுறைச் சக்தியை மீளவும் இருதய குகையில் சிதாகாசத்தில் இருத்தித் திருச்சிற்றம்பலம் என்று உச்சரித்துக் காப்புறுவது மரபு. இதற்குமேல் இதன் பூரண விளக்கம் அறியுமாறில்லை.

(திருமுறைகள் சிவமயமாம் திருச்சிற்றம்பல வாயில் உட்புகுந்தார்க்குப் "பரத்துள் மறைந்தது பார்முதற் பூதமாம்"; வெளிப்போர்ந்தார்க்குப் "பரத்தை மறைத்தது பார்முதற் பூதமாம்".)


# S&S Engravers

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைககேற்ப**
**குறைந்த விலையில்**



Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels,

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**

# சிவதீட்சை

## (சைவ அநுட்டான விதி)

முதுபெரும் புலவர் ச. சுந்தரேசம்பிள்ளை
சிதம்பரம்

**கடந்த இதழ் தொடர்ச்சி:**

உறவினர் அல்லது நண்பர்கள் வீட்டில் துக்கநாளாக இருக்குமானால் யாது செய்தல் வேண்டும்?

இருவகையானவர் வீட்டிலும் துக்க நாளாக இருக்குமானால் அவர்கள் வீட்டில் உணவு உண்ணலாகாது. அவர்கள் வீட்டில் பதினாறாவது காரியம் முடிந்த அன்று முதல் உணவு உண்ணலாம். அவர்கள் வீட்டிலும் எப்போதும் போல் சடங்குடன் அநுட்டானம் செய்யலாம்.

புலால், மது, உண்போர் வீட்டில் உண்ணலாமா?

கண்டிப்பாக உண்ணலாகாது. காபி, தேநீர், மோர், நீர் முதலிய திரவப் பொருள் மட்டும் அவர்கள் வீட்டில் அருந்தலாம்.

சிவ தீட்சை பெற்றவர்கள் உணவில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் ஏதேனும் உண்டா?

கட்டாய விதி ஏதுமில்லை. சிவ தீட்சை பெற்றவர் எந்த நாட்களிலும் சுத்த சைவ உணவைத் தான் உண்பர். அநுட்டானம் முடித்து காலை வேளையானால் பழைய சோறும் உண்ணலாம். இரவில் சோறோ இட்லி தோசை முதலிய சிற்றுண்டியோ உண்ணலாம். இரவில் 7, 8 மணிக்குள் அரை வயிறு சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நன்மையுண்டு.

சிறப்பு விதி

எப்போது சிவ தீட்சை பெற வேண்டும்?

வயது 7, 12, 21, 51, 70-க்குள் சிவ தீட்சை பெற்று விடல் வேண்டும். சிவனருள் கை கூடினால் அப்போதே பெற்று விடலாம். வீர சைவ மரபில் தாய் வயிற்றில் குழந்தை வளரும் ஆறாவது மாதத்திலேயே தாயின் காதில் குழந்தைக்காக சிவ உபதேசம் செய்வது வழக்கம்.

பிரகலாதன், கருவுற்று நீலாவதி வயிற்றில் வளரும்போது

கருவுற்ற மாதத்திலேயே “ஓம் நமோ நாராயணாய” என்ற அஷ்டாட்சர மந்திரம் உபதேசித்ததாக வைணவ புராணம் கூறுகிறது.

நாமும் காலம் கடத்தாமல் இளமையிலேயே சிவ தீட்சை பெற்றுக் கொள்வதுதான் சிறப்பு. இக்கூடு என்றைக்கு எவ்விடத்தில் எப்படி விழுமோ? யார் அறிவார்?

காற்றுள்ள போதே தூற்றிக் கொள். அதாவது மூச்சுள்ள போதே ஆராய்ந்து முடிவு செய்துகொள் என்பதை நம்புக.

“கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு உருகிற்று என்னுள்ளமும்” என்ற அப்பர் வாக்கை நினைந்து தீட்சை பெற்றுக் கொள்க.

வீட்டிலோ, நீர்நிலையிலோ, நீர்க்கரையிலோ அநுட்டானம் செய்யும்போது பின்பற்ற வேண்டியது யாது?

சூரியன் தோன்றும் முன்பு எழுக. “சிவ சிவ” என்று கூறி திருநீறு இடுக. பூமியைத் தொட்டு வணங்குக அல்லது தாய் தந்தை திருவடிகளைத் தொட்டோ நினைந்தோ வணங்குக. காலைக்கடன் முடித்து நீராடியபின் முதல் நாள் தோய்த்து உலர்ந்த ஆடையை அணிக. அநுட்டானத்தின்போது சட்டை அணிந்திருக்கலாகாது. காலையில் கிழக்கு முகமும் மாலையில் வடக்கு முகமும் அமர்ந்து செய்தல் வேண்டும்.

ஆசனத்தில் அமர்ந்ததும் யாது செய்தல் வேண்டும்?

செய்யும் இடத்தை நீர் தெளித்து பலகையில் அல்லது பனையோலை யல்லாத தடுக்கில் அமர்க. தூய்மையுள்ள தாம்பாளத்தில் நீர் நிரம்பிய குவளை கரண்டியுடன் எதிரில் வைக்கலாம். திருநீற்றுப்பை அல்லது திருநீற்று மடலை வலப் பக்கத்தில் வைக்கவும். திருநீற்றை நீர் விட்டு குழைக்காமல் உத்தூளனமாக நெற்றியில் பூசுக. வலக்கை, இடக்கை, மார்பு மூன்று இடத்திலும் மேல் கீழ் கோடு போல் பூசவும்.

கணபதி துதி:

இரு கைகளை மூடிக் கொள்க தலையில் கொட்டிக் கொள்க. மகா கணபதிக்கு வணக்கம். சிவகுருவுக்கு வணக்கம் என்னை ஈன்ற அன்னைக்கு வணக்கம். இன்று செய்யும் சைவ அநுட்டான வழிபாடு இனிதே முடிய அருள்புரிக... இந்தச் செயல் நல்ல முறையில் முடிய அருள் புரிக என்று வேண்டுக.

32ஆம் பக்கம் பார்க்க

# சைவ சமயத்தில் அந்திமைக் கிரியைகள்

கடந்த இதழ் தொடர்ச்சி:

## அஸ்தி சஞ்சயனம்

தகனம் செய்த முதல் ஐந்து நாட்களில் அல்லது ஏழாம், ஒன்பதாம் நாடகளில் எலும்புகளை (அஸ்தி) எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்த ஓமம், தத்துவ ஓமம் செய்யவும். அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து தலைவரை அபிஷேகம் செய்து பின் சத்தியோசாதம் முதலாகப் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி முழந்தாள், கொப்பூழ், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தித் தூபதீபம் காட்டியபின் முழந்தாள், கொப்புழ், நெஞ்சு, முகம், தலை முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசதம் முதலான மந்திரம் கூறி எலும்புகளை எடுத்து முக்காலியிலுள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு பாத்திரத்தின் வாயைக் கோடித் துணியால் மூடிக் கட்டவும்.

மிகுதியான எலும்பு, சாம்பலை, அள்ளி அவ்விடத்தைச் சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து பால் தெளித்து நிலத்தைக் குளிரப் பண்ணி வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி தட்டை அப்பம், (வறுத்த அரிசிமாவை நீரில் குழைத்து பாக்கு அளவில் உருட்டியும், தட்டையாக்கியும் வகைக்கு ஏழு தட்டை அப்பம் செய்யப்படும்) வடை (கோது நீக்காத உழுந்தில் செய்தது) முதலியவற்றை பூத பிரேத பைசாசங்களின் பொருட்டு நிவேதித்து திருமுறை ஓதி வழிபாடு செய்தபின்னர் எலும்பையும் சாம்பலையும் சமுத்திரம் முதலிய புண்ணிய நீர் நிலைகளில் விடவும்.

எட்டுச் செலவு

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. இது தேசவழமையில் உள்ள கிரியை ஆகும். இறந்த நாளிலிருந்து ஏழாம் நாளில் செய்யப்படும். தேவை கருதி ஐந்தாம் நாள் செய்யப்படுவதும் உண்டு. இறந்தவர் விரும்பியுண்ட உணவுவகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து தீபம் காட்டி அவ்வுணவு வகைகளில் சிறுபகுதியை

39ஆம் பக்கம் பார்க்க

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

- உள்ளம் கெட்டால் உய்தியில்லை. உள்ளத்தை நல்வழிப்படுத்தப் பிரார்த்தனை அவசியம்.

- நற்குண நற்செயல்களைச் சிறுவயதிலேயே சிறார்களுக்குப் புகட்ட வேண்டும்.

- சமுதாயத்தில் மனிதன் ஓர் அங்கம். சமூகத்தை விட்டு மனிதனால் வாழமுடியாது. எனவே மனிதன் சமூகத்தில் ஒருவனாக வாழவேண்டியவன். மனிதனுக்குப் பிழைக்கத் தெரிந்திருக்க வேண்டும். சமூகத்தோடு ஒத்துவாழவும் தெரிந்திருக்க வேண்டும்.

- நீங்கள் மனமுருகிப் பிரார்த்தனை செய்யுங்கள். ஆண்டவன் உங்கள் பிரார்த்தனைக்கு நிச்சயம் செவிசாய்ப்பார்.

- அன்பே சிவம் என்ற கொள்கையே சைவத்தின் அடிநாதம். அனைத்துயிர்களையும் அன்பினால் வசப்படுத்தி அன்புவழி வாழவைப்பதே சைவத்தின் குறிக்கோள் ஆகும்.

- ஞானதாகம் கொண்ட ஒரு ஆத்மீகவாதிக்கு தன்னலம் கருதாத வாழ்வும், தயாளசிந்தனையும், மெய்ஞ்ஞான ஈடுபாடும் அவசியம்.

- எந்த ஒரு நிறுவனத்தையும் வளர்த்தெடுக்க வேண்டுமென்றால் திட்டவட்டமான கொள்கையும் தீவிரமான குறிக்கோள்களும் நிறுவன செயல்திட்டத்தில் இருக்க வேண்டும்.

- இவ்வுலகில் அனைவரும் அமைதியை நாடி நிற்கின்றனர். ஆனால் அமைதி என்பது எளிதில் வந்து விடுவதில்லை. ஒருவேளை வந்தாலும் அது நீண்டநாள் நிற்பதில்லை.

- அமைதி என்பது ஒரு தெய்வீகப் பண்பு. அது ஆன்மிகத்தின் உயரிய தன்மையாகும்.

* அமைதி வேட்கை மிகுந்தவனிடத்ததிலிருந்து வெகுண்டு ஓடிவிடுகின்றது. அது சுயநலம் உள்ளவர்களிடம் இருந்து வெகுதூரம் சென்று விடுகிறது.

* யோகிகள், துறவிகள், மகான்கள், ஆத்மீக மனிதரின் உள்ளங்களில் அமைதி நிலவுகிறது.

* ஐம்புலன்களையும் மனதையும் கட்டுப்படுத்திய ஆசையற்ற மனிதனின் உள்ளத்தில் அமைதி நிலவுகிறது.

* பேராசை, காமவெறி, பொறாமை, கோபம், போர்க்குணம், ஆணவம் இவைகள் அமைதியின் விரோதிகள். விவேகம் வைராக்கியம் பற்றின்மை என்னும் வாளால் இந்த அகப் பகைவர்களை இல்லாது ஆக்குங்கள்.

* புறப்பொருட்களில் அமைதி நிலவுவதில்லை. அது அகத்தேயுள்ள ஆத்மாவில் நிலவுகிறது.

* பல பொருட்களை விலைக்கு வாங்கலாம். ஆனால் பணத்தினால் அமைதியைப் பெற முடியாது.

* தங்களை உயர்த்திக் கொண்டவர்களாலேதான் பிறரை உயர்நிலைக்குக் கொண்டுவர முடியும்.

* தன்னை அறிந்த ஒரு துறவியாலேதான் உள்ளத்து அமைதியை ஏற்படுத்த முடியும்.

* இந்த உலகமானது துக்கம், துர்ப்பாக்கியம், உபாதை, மரணம், நிறைந்தது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

* உன்னை நீ யாரென்று ஆன்மவிசாரம் செய்வதும் இந்த உலகத்தின் உண்மையான இயல்பு பற்றி இடைவிடாது செய்யும் சிந்தனையுந்தான் உன்னை ஆத்ம அனுபூதி அடைய வைக்கும்.

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா


**OFFERED TO THE PUBLIC BY**
**CHILDREN'S EDUCATION FUNDS INC.**

**A VERY DIFFERENT R.E.S.P**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம். இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai**



சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

சிவா கணபதிப்பிள்ளை

**Bus: 416 -438 -0660 / 416-438-3578**
**Res: 905 -472-1139 Call: 416-899-6044**
**FAX: 416 -438 -8532**

**2100 Ellesmere Road, Suite#307, Scarborough, Ontario M1H 3B7**



# APPLEMORE
# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe.

**Ontario Emission Inspection**



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**

**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

ISSN 1703-9185


# முருகன் புத்தகசாலை

இரு இடங்களில் உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.
அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION
MONEY TRANSFER**

**1241A, ELLESMERE ROAD, SCARBOROUGH,
ONTARIO, M1P 2X8, CANADA.**

**TEL : (416) 285-9118**

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit 109**

**Tel: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**

**TEL: 416-807-7468**
**416-410-6401**